CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

திருவாசகம்

சிவபுராணம்

விளக்கவுரை



திருவாவடுதுறை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை

ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

குருபூஜை 4ஆம் திருநாள் விழா மலர்

(தை - அசுவதி)

மெய்கண்டார் ஆண்டு 793

திருவள்ளுவர் ஆண்டு 2047

மன்மத ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் தேதி

(11. 01. 2016)

திருவாவடுதுறை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உரிமைப் பதிப்பு

வெளியீடு எண் : 737

விலை ரூ. 20.00

வெளியீடு :

திருவாவடுதுறை ஆதீனம்,

திருவாவடுதுறை - 609 803.

நாகை மாவட்டம், தொலைபேசி: 04364 - 232021.

ஸ்ரீ நமசிவாய மூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

உ

சிவமயம்

சிவபுராணம் - உரை

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து நான்காவது குரு மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக

பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் அருளாணையின் வண்ணம்

வெளியிடப்பெறுகிறது.

உரையாசிரியர்

சிவத்திரு. சு. குஞ்சிதபாதம்

ஆதீனப்புலவர்.

திருவாவடுதுறை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சிவபுராணம் – உரை
உரையாசிரியர்	:	ஆதீனப்புலவர். சு. குஞ்சிதபாதம்
வெளியீடு	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.
வெளியீட்டு எண்	:	737
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
பிரதிகள்	:	1000
வெளியீட்டு நாள்	:	11 – 01 – 2016
தாள்	:	சேஷாயி 13.7 .
நூல் அளவை	:	1/8 டிம்மி
பக்கங்கள்	:	64
விலை	:	ரூ. 20.00
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஸ்ரீநமசிவாயமூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.
புத்தகக்கட்டு	:	பர்ஃபக்ட் பைண்டிங்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருமரபு வாழ்த்து

கயிலாய பர்ம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.- *காஞ்சிப் புராணம்.*
மாதவச் சிவஞான யோகிகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்
ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்
அருள் வரலாற்றுச் சுருக்கம்

உலகம் ஓர் குலம்; உலகு அனைத்தும் இன்புற வேண்டும் என்ற பரந்தமனம் படைத்தது ஆசாரியப் பரம்பரை. திருக்கயிலையில் உண்டாகிய இப்பரம்பரைக் காலம் பல கடந்து இடையறாது இந்நாள் வரை வளர்ந்து வருகிறது. கயிலைப் பரம்பரையின் மெய்கண்ட சந்தான ஆசாரியர்களில் அருள்திரு உமாபதி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ அருள் நமசிவாயரிடம் தீட்சை பெற்றவர் ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசர். அவரிடம் சிவஞான அபிடேகமும், உபதேசமும், ஆசாரிய பரம்பரையைப் பாதுகாத்து வர திருஆணையும் பெற்று, திருவாவடுதுறையில் ஆதீனத்தைத் தோற்றுவித்த முதற்பெரும் குருமூர்த்திகள் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்.

இவர்கள் சோழ மண்டலத்தில் நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு மேற்கே 3 கி.மீ தொலைவில் அமைந்த மூவலூர் என்னும் ஊரில் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்கள். இவர்களது பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதன் என்பது. இளம் பிராயத்தில் இவர்கள் தம் பெற்றோருடன் புள்ளிருக்குவேளூரில் (வைத்தீசுவரன் கோயில்) ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானை வழிபட்டுத் திருவருளில் ஒன்றிய சிந்தையினராக மனமுருகி நின்றபோது, பெருமானே ஒரு சிவாசாரியர் திருமேனி தாங்கி வந்து சிவலிங்கத் திருமேனி ஒன்றினைத் தந்தருளிய பேறுடையவர்கள்.

தல யாத்திரையாகத் தம் அடியார் திருக்கூட்டத்துடன் மூவலூர் சேர்ந்த ஸ்ரீ சித்தர்சிவப்பிரகாசர், சிறிய பெருந்தகையராக விளங்கிய வைத்தியநாதரைக் கண்டார்கள். சிவஞானப் பேற்றிற்கு உரிய குறிகளையும் திருவருட்குறிப்பையும் உணர்ந்து, பெற்றோர் இசைவுடன் பிள்ளையைத் தம்முடன் அழைத்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார்கள்.

அங்கு ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசர் அப்பிள்ளைக்கு ஞானதீக்கை புரிந்து நமசிவாயம் என தீட்சாநாமம் சாத்தி, குரு பரம்பரையில் தாம் பெற்ற சிவஞான உபதேசத்தை அருளிச் சிவஞான ஆனந்த அனுபவம் கைவருமாறு அனுக்கிரகம் செய்தார்கள். குருமரபில் தாம் பெற்ற ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் பூசை செய்த ஸ்ரீ ஞான மாநடராசப் பெருமானையும், தம்முடைய ஆன்மார்த்த மூர்த்தியையும் பூசித்து வரும் அதிகாரத்தையும் வழங்கினார்கள். தாம் வீற்றிருந்த இடத்தில் வரைகீறி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அமைக்கப்பெற்ற அறையுள் அமர்ந்து சைவ சித்தாந்த மரபு தழைக்கச் சிவஞான உபதேசம் செய்துவர ஆணையருளி, தாம் திருமறைக்காட்டிற்கு எழுந்தருளினார்கள்.

ஸ்ரீ நமசிவாய தேசிக மூர்த்திகள் தம் ஞானாசிரியர் திருவாணையின்வண்ணம் அவர் வகுத்த அறையிலிருந்து, வரும் பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞான உபதேசம் அருளி சுத்தாத்துவிதச் சைவ சித்தாந்தப் பரிபாலனம் செய்து வந்தார்கள்.

இவ்வண்ணம் ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக வீற்றிருந்து சுத்தாத்துவிதச் சித்தாந்த நன்மரபு தழைக்கச் செய்த ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள், தங்கள் குரு சந்தானம் வளர்ந்தோங்கி வர, தாம் தோற்றிவித்த ஞானகுருபீடத்திற்குத் தக்கவரை தேர்ந்தெடுக்க திருவுள்ளம் பற்றியபோது ஆதீனத்து இரண்டாவது குருமூர்த்திகளாக விளங்கியருள மறைஞான தேசிகரின் பங்குவ நிலையை உணர்ந்து அவர்களுக்கு சிவஞான உபதேசமும் ஆசாரிய அபிடேகமும் செய்தருளினார்கள். அந்நிலை யிலேயே மறைஞான தேசிகர் தைல தாரைபோல இரடையறாது உருகி சிவானந்த நிட்டை கூடினார்கள். இவர்கள் நிட்டை கூடிய இடம் திருவாவடுதுறையில் மறைஞானத் தபோவனம் என்று அன்று முதல் போற்றப்படுகிறது. பின் அம்பலவாண தேசிகருக்கு ஞானாபிடேகம் செய்து துவிதீய ஆசாரியராக (இளைய சந்நிதானம்) அமைத்து, ஒரு தை மாதம் அசுவதி நன்னாளில் சித்தாந்த சுத்தாத்துவித முத்தி அடைந்தருளினார்கள். ஆதீனக் குருமுதல்வர் ஞான சமாதித் திருக்கோயிலில் நாள்தோறும் காலை அபிடேக ஆராதனைகளும் இரவு தீபாராதனையும் நடைபெற்று வருகின்றன. மாதந்தோறும் அசுவதி நட்சத்திரத்தில் குருமூர்த்திகளுக்குச் சிறப்பு வழிபாடுகளும் தோத்திர நூல்கள் பாராயணமும் செய்யப்பட்டு வருகின்றன.

பிரதி வருடம் தை மாதம் அசுவதி நன்னாளில் (மகரத்தலைநாள்) ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக விளங்கும் **அருள்திரு நமசிவாய மூர்த்திகளின்** குருபூசை விழாக் கொடியேற்றத்துடன் துவங்கி தினமும் காலை, இரவு இருவேளைகளிலும் அபிடேக ஆராதனைகளோடு பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருவாவடுதுறை ஆதீனம்

24ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

முகவுரை

பெருந்துறையில் சிவபெருமான் அருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந்து இருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்துத்
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர்
அடிகள்அடி இணைகள் போற்றி.

– காஞ்சிப்புராணம்.

சிவஞானபோத எட்டாஞ் சூத்திரத்திற்கு ஓர் கண்கண்ட இலக்கியமாய்த் திகழ்வது எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் ஆகும். திருமுறைகளுக்கு முழுமையான உரையினை எழுதஇயலாது. எனினும் சைவத்திருமுறைகள் சைவ சித்தாந்த வரம்புடன் திகழும் உண்மையினை உணர்த்தும் நோக்கில் சிவநெறிச் சீலராகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்கள் அவ்வக்காலங்களில் சிறந்த உரைகளை எழுதி உதவினர். அம்முறையில் திருவாசகத்திற்கு எழுந்த உரைகள் பல.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'குருவருள் விளக்கம்' என்னும் விரிவான சிறந்த உரையினை எழுதியுள்ளார். தருமை ஆதீனப் புலவர் மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் குறிப்புரையும் அரிய விளக்கங்களும் தந்து சிறப்பான உரை ஒன்றினை வழங்கியுள்ளார். சங்கநூற் செல்வர் பண்டிதமணி சு. அருளம்பலவனார் அவர்களும் ஆராய்ச்சி உரை ஒன்றினைப் போற்றத்தக்க முறையில் வழங்கி உள்ளார். சித்தாந்த அறிஞர் பெருமகனார் சி.சு. கண்ணாயிரம் அவர்களும் சிவக்குடில் உரை என்னும் அருமையான விரிவான மேற்கோள்கள் கொண்ட உரை ஒன்றினை எழுதியுள்ளார். மேலும் பல உரைகள் உள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாசகத்தின் சிற்சில பகுதிகளுக்கு மட்டும் தனித்தனியே உரைகள், பல அறிஞர்களாலும் எழுதப் பெற்றுள்ளன. அவற்றுள் சிவபுராணத்திற்கு எழுதப் பெற்ற உரைகளும் பலவாகவே உள்ளன. இருப்பினும் அடியேனுக்கும் திருவருள் உணர்த்திய பல கருத்துக்களை வெளிப்படுத்தும் வாய்ப்பாகத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்** அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் இவ்வுரையினை அடியேன் எழுதியுள்ளேன்.

சிவபுராணமானது திருவாசகத்தின் பிற பகுதிகளோடும், மூவர் தேவாரம் முதலிய பிற திருமுறைகளோடும், சித்தாந்த சாத்திரங்களோடும் ஒத்துச் செல்லும் அருட்பாங்கினையும், சிவாகமங்கள் விதிக்கும் சரியையாதி சிவபுண்ணியங்களையும், கேட்டல் முதலிய ஞானப் படிநிலைகளையும் இனிதாக உணர்த்தும் அழகினையும் குருவருளால் காட்டும் முயற்சியாக இவ்வுரை ஆக்கப்பெற்றுள்ளது. இவ்வுரையில் சிறப்பு உண்டாயின் அஃது அடியேனை இப்பணியில் ஆட்கொண்டருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிக்கு அர்ப்பணிப்பதற்கே உரியதாகும்.

ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளின் மகரத் தலைநாள் குருபூஜை விழாவின் **நான்காம் திருநாளில் (11-01-2016)** ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இவ்வுரை நூல் வெளியிடப் பெறுகிறது. அவர்களின் திருவடிகளைப் போற்றி வாழ்தலே பெருவாழ்வு.

இங்ஙனம்

சிவத்திரு. சு. குஞ்சிதபாதம்,
ஆதீனப்புலவர்,
திருவாவடுதுறை.

இடம் : திருவாவடுதுறை
நாள் : 05.01.2016

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

சிவபுராணம்

(சிவனது அநாதி முறைமையான பழைமை)

நமச்சிவாய வாஅழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க!
ஈச னடிபோற்றி! எந்தையடிபோற்றி!
தேச னடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி!
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்ங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமான னாம்விமலா!
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அளவிறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய்! காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்!
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி! மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேனா ரமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக் கன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காக்குமெங் காவலனே! காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா! மிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே!என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்; எம் ஐயா! அரனேயோ! என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே!
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே!
அல்லற் பிறவி அறுப்பானேஓ என்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

சிவனது அநாதி முறைமையான பழைமை :

உண்மைஅறிவுஆனந்தமயமாய் விளங்குதலும் உயிர்களாகிய நாமும் அப்பெருநிலையினை அடைய வேண்டும் என்று பரங்கருணையோடு திருவுளம் கொள்ளுதலும் சிவபெருமானுடைய பழைமையாகும். இது காலம் கடந்த பழைமையாகவின் அநாதிமுறைமை யான பழைமை எனப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

சிவபுராணம் - உரை

நமச்சிவாய வாஅழ்க ; நாதன் தாள் வாழ்க

நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து வாழ்வதாக. (இத்திருவைந்தெழுத்தால் சிந்திக்கப் பெறும்) தலைவனாகிய சிவபெருமானது திருவடி வாழ்வதாக.

நம: சிவாய என்பது நமச்சிவாய எனப் புணர்ந்து "வணக்கம் சிவனுக்கு" என்று பொருள்படும் என வடமொழி வல்லார் உரைப்பர். இம்முறையில் இறைவனது திருநாமமாகத் திருவைந்தெழுத்து விளங்குகின்றது. மேலும் மகா மந்திரமாகவும் விளங்குகின்றது. சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஓவ்வோர் எழுத்திற்கும் பொருள் உரைக்கப்படுகின்றது.

ந - திரோதான சத்தி, ம - ஆணவ மலம், சி - சிவம்,
வ - திருவருட் சத்தி, ய - ஆன்மா (உயிர்) என்பது சைவ சித்தாந்த விளக்கம். திரோதான சத்திக்குள் கன்ம மாயைகள் அடங்கும்.

இவ்வாறு ஓவ்வோர் எழுத்தும் பொருள் தருவதால் 'அஞ்சுபதம்' என்று வழங்குவர் மேலோர். "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" என்பது சுந்தரர் தேவாரம்.

அஞ்செழுத்தின் பொருளை உணர உணர ஆன்மாவாகிய நாம் சிவபெருமானுக்கு அடிமை என்னும் உணர்வு மேலோங்கும். "அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டு" என்பது சிவஞானபோதம். எனவே தலைமை பற்றி அஞ்செழுத்தின் பொருள் சிவபெருமான் திருவடியே என்று கொள்ளலாம்.

பெருமான் திருவடி மனவாக்குகளுக்கு எட்டாதது. நம்மை உய்யக் கொள்ளும் பொருட்டு மன வாக்குகளுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எட்டும் முறையில் திருவடியே அஞ்செழுத்தாக வந்துள்ளது எனலாம்.

"பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில்
நின்கழல் புணை கொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்"

(அடைக்கலப்பத்து - 4)

துன்ப வெள்ளமாம் பிறவியைக் கடக்கப் பெருமான் திருவடியைப் புணையாக உருவகம் செய்த வாதவூரடிகள், 'தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து' எனவரும் திருப்பாடலில்

"அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை"

என்று அருளியுள்ளனர்.

பிறவிக் கடலைக் கடப்பதற்குப் புணையாகத் திருவடி, அஞ்செழுத்து என்னும் இரண்டுமே கூறப்பட்டுள்ளமையால் திருவடியே அஞ்செழுத்தாக விளங்குகின்றமை தெளிவாகும். எனவே நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க என்று வாழ்த்தினர்.

வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

(துஞ்சலும்... சம்பந்தர், தேவாரம்)

கூற்றினை உதைத்தல் திருவடியின் செயலாக இருக்க, அதனை அஞ்செழுத்தின் செயலாக ஓதி அருளிய பாங்கு உணர்ந்து போற்றத்தக்கது.

எனவே அஞ்செழுத்தைத் திருவடியாகவே போற்றி அடியார்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி வருவர்.

நாதன் - தலைவன். எல்லாப் பொருள்களுக்கும் சிவபெருமானே தலைவராக விளங்குகின்றார். மேலும் நாத தத்துவமயமாய் இருப்பவன் என்றும் பொருள் கூறுவர். நாதத் தத்துவத்திற்குக் காரணரும் அவரே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அஞ்செழுத்தின் அருஞ்சிறப்பு

சைவத்துள் நுழைந்து திருக்கோயில் தரிசனம் செய்து வருபவர், ஆன்மார்த்த சிவபூஜை செய்வோர், அட்டாங்க யோகம் பயில்வோர், ஞானநெறி சார்ந்து குருவருளால் சிவோகம்பாவனை செய்வோர், சீவன் முத்தராய்த் திகழ்வோர் என அனைத்து நிலையினருக்கும் அஞ்செழுத்து துணையாக உள்ளது.

திருமுறைகளில் அஞ்செழுத்து தூலம், சூக்குமம் முதலிய எந்த முறையில் இருந்தாலும் ஓதுவோரின் பரிபாகத்துக்கு ஏற்பப் பயன் தருவதாய் விளங்கும். எனவே சாத்திரங்களில் ஓதப்படும் விதிகளைக் கொண்டு திருமுறைகளில் விளங்கும் அஞ்செழுத்தை நோக்கலாகாது. அதுபற்றிச் சாத்திரவிதிகளையும் மறுக்கலாகாது. அவ்விதிகள் குருமுகமாகப் பெறும் மந்திரோபதேசம் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

'வாஅழ்க' என்னும் அளபெடை இங்குச் செய்யுளோசை நிறைக்கும் பொருட்டு வந்துள்ளது. இதனைச் செய்யுளிசை அளபெடை என்பர்.

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

கண்கள் இயல்பாக இமைக்கும் நுண்ணிய கால அளவில் கூட என் உள்ளத்தினின்றும் நீங்காதவனுடைய திருவடி வாழ்வதாக.

நாத தத்துவத்தையும் கடந்த பெருமான் மும்மலக் கட்டில் உழலும் எளியேனுடைய உள்ளத்திலும் இமைப் பொழுதும் கூட நீங்காது எழுந்தருளியிருக்கின்றான் என்பது கருத்து. தம் மீது வைத்துக் கூறி இதுபோல எல்லா ஆன்மாக்களிடத்தும் நீங்காதிருக்கின்றான் என்னும் உண்மையைப் பெறவைத்தவாறு.

கண்ணிமைக்கும் காலத்தினை ஒரு மாத்திரை என்பர். இக்காலத்து நவீன அணு விஞ்ஞானத்தில் ஒரு வினாடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காலத்தைப் பல இலட்சம் கூறுகளாக, பலகோடிக் கூறுகளாகப் பகுக்கின்றனர். எவ்வளவு நுண்ணிய கூறுகளாகக் காலத்தைப் பகுத்தாலும் எந்தக் கூறு அளவான காலத்திலும் சிவபெருமான் ஆன்ம அறிவினின்று நீங்குதல் இல்லை.

சிவம் வியாபகப் பொருள். எனவே அஃது ஆன்மாவை விட்டுப் பெயர்தல் என்பது இல்லை. ஆகையால் 'நீங்காதான்' என்பது ஆன்மாவைக் குறித்துச் சிந்தித்தலைக் கணப்பொழுதும் தவிர்க்கமாட்டான் என்ற கருத்தில் உள்ளது. எப்போதும் நம் உய்வைக் குறித்தே பெருமான் திருவுளம் பற்றி அருள்கின்றான்.

தாய்சேய், தந்தை சேய், சகோதர சகோதரியர், தலைவன் தலைவி முதலான எத்தகைய உறவுகளும் சிவத்திற்கும் ஆன்மாவிற்கும் உள்ள உறவுக்கு இணையானவை அல்ல. ஏனெனில் அவை யாவும் சரீரம் சார்ந்த உறவுகள். சரீரத்திற்கும் ஆன்மாவிற்கும் உள்ள உறவே நிலையானதன்று என்பதால் சரீரம் வாயிலாக வரும் உறவுகளும் அவ்வண்ணமே ஆகும்.

இமைக்கும் பொழுது போன்ற சிறு கால அளவும் கூட நீங்காத உறவு ஆன்மாவுக்கு உண்டென்றால் அது சிவமே ஆகும்.

"ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே" என்பது ஆளுடைய நம்பிகளின் அமுதவாக்கன்றோ. (திருவாவடுதுறைப் பதிகம்)

கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

திருப்பெருந்துறையில் அடியேனை ஆட்கொண்ட குருமணியின் திருவடி வாழ்வதாக.

கோ - தலைமை, பெருமை. கழி - துறை. கோகழி - பெருந்துறை.

'கோகழி' என்பது பசுத்தன்மை கழிதல் என்னும் பொருளில் திருவாவடுதுறையினைக் குறிக்கும் என்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனினும் அடிகளை ஆட்கொண்ட தலமாகிய திருப்பெருந் துறையே இங்குக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. திருப்பெருந் துறையில் குருமணியால் தாம் பெற்ற அருள் அனுபவங்களைப் பின்வரும் அடிகளில் எடுத்துரைக்கக் காணலாம்.

இனி, பண்டாய நான்மறை ஐந்தாம் திருப்பாடலில் பெருந்துறைக்கு வேறாகக் கோகழி குறிப்பிடப் பெற்றுள்ளது என்பர். அவ்விடத்தில் 'எழு கோகழிக்கு அரசை' என்று உள்ளதால் அதற்கு 'எழுந்தருளியிருந்த அப்பெருந்துறைப் பெருமானை' என்று பொருள் கொள்ளுதலே பொருத்தமாகும்.

"குருமணி" என்பதற்குக் குருவில் மணிபோன்றவர்; பரமாசாரியன் என்று அழகுறப் பொருளுரைப்பார் மகாவித்துவான் தேசிகர் அவர்கள்.

இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க

என்று வருவதால் இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காது உறையும் முதல்வனே கோகழியில் குரு மணியாக எழுந்தருளி ஆட்கொண்டான் என்னும் உண்மை பெறப்படுகின்றது. 'தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த' என்னும் சிவஞானபோதம் (சூத்திரம்: 8) இங்குச் சிந்திக்கத்தக்கது.

ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

சிவாகமப் பொருளாகி நின்று அடியேனை அணுகி அருள் செய்பவன் திருவடி வாழ்வதாக.

அண்ணித்தல் : அண்ணுவித்தல் என்க்கொண்டு உயிர்கள் தன்னை அடையும்படி செய்தல் என்று பொருள் கொள்ளுதலும் உண்டு. அண்ணித்தல் - இனித்தல் என்றும் பொருள் கொள்வர்.

சிவாகமங்களைக் கேட்போர்க்கே சிவபரம்பொருளின் இருப்பும் இயல்பும் மலைவின்றி விளங்குதலால் 'ஆகமம் ஆகிநின்று' என்றருளினர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோகழியில் குருமணி எழுந்தருளவே சீடராகிய வாதவூர் அடிகள்பால் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை ஆகிய ஞான அனுபவங்கள் நிகழ்ந்தமையை இவ்வடிகள் முதற்கொண்டு நான்கு அடிகளால் குறிப்பாக அறியலாம்.

ஞானாசிரியர், சீடன் சிவானுபூதி பெறும் பொருட்டு அவனைச் சிவாகம உபதேசம் கேட்குமாறு செய்ய வேண்டும் என்று திருவுளம் பற்றுவார். இவ்வாறு கேட்பித்தல் அருளோடு ஆசான் எழுந்தருளவே சீடன்பால் கேட்டல் ஞானம் தோன்றும். இவ்வுண்மை,

ஆரியனாம் ஆசான்வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்

என்னும் சிவஞானசித்தியார் (280) திருவிருத்தப் பகுதியால் அறியலாம். இதனில் 'அருளால்' என்பதில் உள்ள அருள் 'கேட்பித்தல்' எனவும், 'அடிஞானம்' என்பது கேட்டல் ஞானம் எனவும் சிவஞான சுவாமிகளின் உரையால் அறியத்தகும். அவ்வுரைப்பகுதி வருமாறு,

".... கேட்பித்தலோடும் தோன்றும் ஆசிரியன் சந்நிதி மாத்திரையானே மாணாக்கன் மாட்டு.... கேட்டல் அறிவு விளங்கித் தோன்றும்."

"ஈண்டு அருள் என்றது ஏற்புழிக்கோடலாற் கேட்பித்தலை உணர்த்திற்று."

எனவே குருமணி கோகழியில் எழுந்தருளியமையால் ஆகமப் பொருளாகி நின்று அக்குருமணி அணுகி அருள் செய்யும் முறையில் அவ்வாகம உபதேசத்தைக் கேட்டலாகிய கேட்டல் ஞானம் அடிகள்பால் தோன்றியமை தெளிவாகும்.

ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

ஒருவனாகவும், திருவடிவங்கள் பல உடையவனாகவும் உயிர் உலகங்கள் எங்கும் தங்குபவனுடைய திருவடி வாழ்வதாக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதல்வன் தன் நிலையில் ஒன்றாக விளங்கி, உலகத்தைத் தொழிற்படுத்தும் முறையில் சிவம் சத்தி என இரண்டாக விளங்கி, அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகையிலும் பல்வேறு திருமேனிகளை மேற்கொண்டு பல வடிவங்களில் விளங்குகின்றான். நவந்தருபேதம் குறித்தும், மாகேசுவர மூர்த்தங்கள் குறித்தும் அறியும்போது இவ்வுண்மை புலப்படும்.

இறைவன் என்பது எல்லாப் பொருள்களிலும் தங்குபவன் என்று பொருள்படும். அது, "ஈர்க்குழாத்தோடு இறை கூர்ந்த" என்ற புறநானூறில் (136) 'இறை கூர்ந்த' என்பதற்குத் 'தங்குதல் மிக்க' என்று பழைய் உரையாசிரியர் பொருளுரைத்துள்ளமையால் அறியலாம்.

நாம் சொற்பொருள் அளவில் அறிந்து கொள்கின்றோம். குருமணியின் ஆகம உபதேசத்தைக் கேட்டுச் சிந்திக்கும் ஆளுடையஅடிகள் எல்லாப் பொருள்களிலும் பெருமான் தங்கியிருக்கும் அருட்பாங்கினை அனுபவத்தில் அறிகின்றனர். 'சிந்தித்தல்' ஞான நிகழ்வில் எல்லாப் பொருள்களிலும் தங்கியிருக்கும் சிவமே தரிசனமாகும் என்ற உண்மையினை "உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்" என்னும் சித்தியார் (281) திருவிருத்தத்தால் அறியலாம். இத்திருவிருத்தத்தின் உரையில் 'இதனானே சிந்தித்தல் ஆமாறும் அதன் கண் நிகழும் அனுபவமும் கூறப்பட்டன' என்பர் சிவஞான சுவாமிகள்.

எனவே சிந்தித்தல் ஞான அனுபவத்தில் நின்று எல்லாப் பொருள்களிலும் சிவபிரானே தங்கியிருத்தலைத் தரிசித் தமையை நினைந்து 'இறைவன் அடிவாழ்க' என்று பாடுகின்றனர் வாதவூர் அடிகள். ஒருவனேயாகிய சிவபெருமான் தம்மைச் சரியை கிரியை யோகங்களில் செலுத்திப் பல்வேறு திருவடிவ தரிசனங்களைத் தந்து பின்னர் ஞானநிலையில் எல்லாப் பொருள்களிலும் தான் தங்கியிருக்கும் பெருநிலையினைக் காட்டிய பேரருளை வாழ்த்துகின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'நமச்சிவாய' தொடங்கி இவ்வடிவரை 'வாழ்க' என்று வாழ்த்துகின்றனர். 'வாழ்க' என்று வாழ்த்துதலின் கருத்து இச்சிந்தனைகள் உள்ளத்தில் நிலைபெற அருள்க என்பதாம். வாழ்க - நிலைபெறுக. அஞ்செழுத்தும், அதனால் நினைக்கப் பெறும் நாதன் தாளும், இமைப்பொழுதும் நெஞ்சத்தில் நீங்காது விளங்கும் அந்நாதனே கோகழியில் குருமணியாக எழுந்தருளி ஆட்கொண்ட திறமும், ஆகமப் பொருளாகி நின்று ஆகமத்தை உபதேசித்த பாங்கும், ஒருவனாகிய அவனே பல திருமேனிகள் தாங்குகின்றமையும் எல்லாப் பொருள்களிலும் தங்கியுள்ளமையும் நெஞ்சத்தில் நீங்காது நிலைபெற வேண்டும் என்னும் கருத்தில் 'வாழ்க' என்று பாடினர். இச்சிந்தனைகள் நிலைபெறுதல் தெளிதலுக்கு வழிவகுக்கும் என்பதை வரும் பகுதியால் உணரலாம்.

அடியார்கள் வாழ்க என்று பாடுதலை

"ஒண்பொனார் அனைய அண்ணல் வாழ்கெனவும்
உமையவள் கண்வன்வாழ் கெனவும்
அண்பினார் பிரியார் அல்லுநன் பகலும்
அடியவர் அடியிணை தொழவே"

(திருப்பந்தணைநல்லூர் - 6)

என்னும் ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தாலும் அறியலாம்.

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க

மன வேகத்தைத் தொலைத்து எளியேனை ஆட்கொண்ட வேந்தனின் திருவடி வெற்றி பெறுக. வேகம் - மனதின் வேகம். இம்மை உள்ளவரையில் தெளிவு பிறவாது. அடிமைத்திறம் கைகூடாது. "ஒல்லை ஆறி" என்பது ஆளுடையபிள்ளையார் திருவாக்கு. திருவருளில் ஆன்மாவை ஒன்றச் செய்வதன் மூலம் மனவேகத்தை ஞானாசிரியர் கெடுத்தருள்வர்.

மனதின் வேகம் கெட்ட நிலையே தெளிதலாம். இவ்வுண்மை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே
குழைந்திருப்பையாயில்"

என்று சித்தியார் திருவிருத்தத்தில் (281) அருளப் பெற்றுள்ளமை கண்டு அறியலாம். மனம் முதலிய உட்கருவிகளே அந்தக்கரணங்களாகும். இத்திருவிருத்தம் தெளிதல் குறித்துக் கூறுவதாகச் சிவஞான சுவாமிகள் குறிப் பிட்டுள்ளனர்.

மனவேகம் கெடுத்தாண்டமை குறிப்பிடப்படுதலின் இவ்வடி தெளிதல் ஞான அனுபவத்தை உரைப்பதாகக் கொள்ளலாம்.

அஞ்செழுத்துச் சிந்தனை வாயிலாக நாதன் திருவடிச்சிந்தனை நிலைபெற்று அகத்தே இமைப்பொழுதும் நீங்காதிருக்கும் முதல்வனே புறத்தும் (கோகழியில்) குருமணியாக எழுந்தருளி உள்ளான் என அருளால் உணர்ந்து அகத்தும் புறத்தும் வழிபட்டுக் குருமணியின் ஆகம உபதேசத்தைக் கேட்டு, சிந்தித்து வருதலில் உறுதியாக நின்று தெளிதல் பேற்றினைப் பெற்றுச் சிறந்தார் ஆஞடைய அடிகள்.

தெளிந்தபின் நிட்டை கூடுவதற்கு எந்த இடையூறும் இல்லாமையால் இத்தெளிதல் அனுபவம் ஆன்மாவுக்குத் தளைகள் நீங்கிய வெற்றி அனுபவமாகும்.

எனவே தெளிதலைக் கூறும் இவ்வடியினை வெல்க என்று தொடங்கினர்.

ஆன்மாவுக்குக் கிடைத்த வெற்றி முதல்வன் திருவருளால் விளைந்ததாகலின் அவ்வெற்றியை அவன் திருவடிக்கே அர்ப்பணித்து

'வேந்தன் அடி வெல்க' என்று துதிக்கின்றனர்.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க

பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் பிஞ்ஞகனின் இடப்பட்ட வீரக்கழல்களை உடைய திருவடிகள் வெற்றி பெறுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன். தலைக் கோலமாவது சடைமுடியும் அம்முடிமேல் பிறை, கங்கை, கொன்றை முதலியன தாங்கப் பெற்றிருத்தலுமாம். இந்தப் புனிதத் தலைக்கோலத்தை நினைந்து நினைந்து பிறப்புக்கு ஏதுவாகிய ஐம்புலப்பற்றை முற்றிலும் விடுத்தனர் சனகாதி முனிவர்கள். இதனை

"சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள் தொல் அரா நல் இதழி
சழிந்த சென்னி சைவ வேடம் தான் நினைத்து ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு..."

என்னும் ஆளுடையபிள்ளையார் தேவாரத்தால் தெளிவாக உணரலாம். (திருமுதுகுன்றம் - 6).

பிறவிவேர் அறுத்தென் குடிமுழுதாண்ட பிஞ்ஞகா என்பது பிடித்தபத்து (6).

'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' என்றமையால் இவ்வடி பிறப்பறுத்தலாகிய நிட்டையினைப் பெற்றமையை உரைக்கின்றது. பிறப்புக்கு ஏதுவாகிய இருவினைகளை அறுப்பதன் மூலம் பிறப்பு அறுக்கப்படுகின்றது. நிட்டை கை கூடுகின்றது. இதனைச் சிவஞான சித்தியாரின் அடுத்த திருவிருத்தத்தின் மூலம் (283) அறியலாம்.

புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவம்கீழ் நூக்கும்.
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணா னாகி
எண்ணும்இக லோகத்தே முத்தி பெறும் இவன்தான்
எங்கெழில்என் ஞாயிறுஎமக்கு என்று குறைவின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனில் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதுஅரன்போல் நிற்பன்.

இத்திருவிருத்தத்தின் உரையில் சிவஞான சுவாமிகள் "இதனானே நிட்டையாமாறும் அதன் பயனும் கூறப்பட்டன" என்று உரைத்துள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

தன்னிடத்து அன்பில்லாத மாந்தருக்குத் தொலைவில் உள்ளவனான பெருமானின் பூப்போன்ற திருவடிகள் வெற்றி பெறுக.

புறத்தார்க்குச் சேயோனாகப் பெருமான் விளங்குவதால் பிறப்பறுக்கப் பெற்ற சீவன் முத்தர் புறத்தாரிடம் இணங்காது இருக்கத்தக்கவர் என்ற குறிப்பும் அடங்கியுள்ளமை உணரத்தக்கது.

கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க

கை கூப்பி வணங்கும் அன்பர்கள் உள்ளம் மகிழ்வதற்கு ஏதுவாகிய இறைவனுடைய திருவடிகள் வெற்றி பெறுக.

குருலிங்க சங்கம வழிபாடு சீவன் முத்தர்க்கு முத்தி இன்பத்தை மேன்மேலும் வளர்க்கும் என்ற குறிப்பு அடங்கியுள்ளது.

சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

தலையைத்தம் திருவடியில் தாழ்த்தி ஒடுங்கச் செய்வோரை உயர்வடையச் செய்யும் சீர்மை உடைய இறைவனின் திருவடிகள் வெற்றி பெறுக.

சிரம் குவிதல் - இறைவன் திருவடிகளில் தலை தாழ்ந்து ஒடுங்குதல். இஃது ஆன்மபோதம் திருவருளில் அடங்குதலுக்கு அடையாளம்.

"தாள் + தலை என்பது தாடலை என இயைந்து நிற்பது போல அத்துவித பாவனையினால் இறைவன் திருவருளிற் கலந்து நிற்றல்" என் அழகுற விளக்குவார் பண்டிதமணி சு. அருளம்பலவனார் அவர்கள்.

சீரோன் - 'சீர்' என்ற சொல்லால் குறிக்கப்பெறும் அழகு, செல்வம், புகழ் முதலிய பல சிறப்புகளும் நிறைந்தவன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓங்குவித்தல் - ஆன்மபோதம் திருவருளில் அடங்கப் பெற்ற சீவன்முத்தர் வாயிலாகத் தானே செய்யத்தகும் பல அற்புதச் செயல்களை நிகழ்த்தி அவரைத் தானாகவே ஓங்கச் செய்வான். இவ்வுண்மை,

துரியம் கடந்த சுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்.

என்னும் திருக்களிற்றுப்படியாரால் (69) நன்கு தெளிவாகும். திருக்களிற்றுப்படியாரில் இச்செய்யுளைத் தொடர்ந்து நால்வர் பெருமக்களால் நிகழ்ந்த அற்புதச் செயல்கள் போற்றப் பெற்றுள்ளமை காணத்தக்கது.

நமச்சிவாய மந்திரத்தையும், நாதன் திருவடியையும், அவன் குருமணியாக ஆண்ட சிறப்பு முதலியவற்றையும் நெஞ்சத்தில் நிலைபெறச் செய்து சிந்தித்தலில் உறைப்புடன் நின்ற வாதவூரடிகளின் பொருட்டு முதல்வன் பாசத்தைச் சாடி வெற்றி கொண்டான். அவ்வெற்றியைப் புகழ்ந்து 'வேகம் கெடுத்தாண்ட' தொடங்கி இவ்வடிவரை 'வெல்க' என்று பாடினர். மலவாதனை தம்மை வருத்தாத வண்ணம் அவ்வெற்றி தொடரவேண்டும் என்ற குறிப்பும் இப்பகுதியில் உள்ளது.

இனி, தம் பொருட்டு பாசப்பகையை வென்று தமக்குப் பேரானந்தம் அருளிய பெருமானை நன்றிப் பெருக்குடன் போற்றிப் பரவும் பகுதி வருகின்றது. நன்றிப் பெருக்காம் பிரவாகத்தைச் செய்யுள் அடிகளின் விரைவான நடையிலும் தரிசித்து மகிழலாம்.

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி

ஐசுவரியத்தை உடையவனது திருவடிக்கு வணக்கம்; எம் தந்தையினது திருவடிக்கு வணக்கம். ஞானஒளி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடிவினனாகிய பரமாசாரியனது திருவடிக்கு வணக்கம். சிவபிரானுடைய சிவந்த திருவடிக்கு வணக்கம்.

ஈசன் - ஐசுவரியத்தை உடையவன். தேசு - ஒளி. ஈண்டு ஞானத்தை உணர்த்துகின்றது.

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி

அடியார்களின் அன்பில் நிலைபெற்ற நிமலன் திருவடிக்கு வணக்கம். மாயப் பிறப்பினை அறுத்தருளும் மன்னனின் திருவடிக்கு வணக்கம்.

நிமலன் - இயல்பாகவே பாசங்களின் நீங்கிய தூயோன்.

நேயம் - அன்பு. சிவஞான போதத்துப் பதினோராஞ் சூத்திரத்தில் குறிப்பிடப்பெறும் 'அயரா அன்பு'.

நேயத்தே நின்ற நிமலன்

ஏனைய இடங்களில் மறைய நின்றுள மாமணிச் சோதியான் உறவு கோல் நட்டு உணர்வு சுயிற்றினால் முறுக வாங்கிக் கடையும் அன்பர்களின் அன்பில் வெளிப்பட்டு நிற்கின்றான்.

அன்பை வளர்த்து அருள்பெருகப் பெற்று, பாசத்தினின்றும் விடுபட்ட அடியார்களின் அன்புமயமான உள்ளமே இயல்பாகவே பாசம் நீங்கிய பெருமான் வெளிப்பட்டு நிற்பதற்குத் தகுதியான இடமாகும்.

மாயப்பிறப்பு

தன்னையும் தலைவனையும் அறியாது, தான் அல்லா உடம்பினைத் தான் என்றும் தன் மல நீக்கத்திற்கு உதவாத விடயங்களைத் தனக்கு உகந்தவையாகவும் கருதி பிறவியானது வாழப்படுவதால் இதனை 'மாயப்பிறப்பு' என்றனர்.

சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி

சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

எழுந்தருளிய நம் பரமாசாரியரின் திருவடிக்கு வணக்கம். தெவிட்டாத இன்பத்தை ஈந்தருளும் மலை போன்றவனுக்கு வணக்கம்.

சீரோன் எழுந்தருளிய தலமும் 'சீரார் பெருந்துறை' என்று சிறப்பிக்கப்படுகின்றது. அடியார்களுக்கும் 'உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்' என்று குறிப்பிடப் பெறுதல் காண்க. (திருவெம்பாவை - 9)

சிவானுபவம் ஆராத இன்பம். உலக அனுபவமோ இன்பம் போலக் காட்டி நில்லாது நீங்கக் கூடியது. அதன்மீது தோன்றும் அவாவோ எளிதில் நீங்காது மேன்மேலும் பெருகும். எனவே இங்கு சிவபோன்பத்திற்குச் சொன்னது போல ஆராமைப்பண்பினை உலகப்பற்றாம் அவாவிற்கு உரைத்து 'ஆரா இயற்கை அவா' என்றனர் வள்ளுவப் பெருந்தகை.

மலை - உவம ஆகுபெயர். இந்த ஆராத இன்பமே உயிருக்கு உறுதிப் பயனாய் இருத்தலால் இதனை அருளும் பெருமானை 'மலை' என்று போற்றினர்.

அடுத்து வருகின்ற ஆறு அடிகள் பின்வருமாறு கொண்டு கூட்டிக் கொள்ளப்படும்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்ங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

இனி பொருள் காண்போம்.

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி

நெற்றிக்கண்ணை உடைய இறைவன் தனது கருணைக் கண்ணை அடியேனுக்குக் காட்டும் பொருட்டுத் திருப்பெருந் துறையில் பரமாசாரியனாக எழுந்தருளி வந்து அடைந்ததால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி

நினைப்பதற்கும் எட்டாத அழகு நிறைந்த வீரக்கழல் அமைந்த திருவடியை அடியேன் வணங்கி

'கண்நுதலான்' என்பதற்குக் 'கண் சுமந்த நெற்றிக் கடவுள்' (திருவம்மானை - 8) என்று பாடியதற்கேற்ப 'கண்விளங்கும் நெற்றியையுடைய கடவுள்' என்றும் பொருள் கொள்வர்.

கண்ணுதலான் குருவாக எழுந்தருளித் தான் ஆட்கொள்ளும் ஆன்மாவின் அறிவுக்கு அறிவாகத் தனது திருவருள் விளங்குதலை அந்த ஆன்மாவுக்கு உணர்த்தி அருள்வான். அறிவுக்கு அறிவாக விளங்கும் திருவருளே 'கருணைக்கண்' ஆகும். ஆணவ படலத்தைக் கிழித்து இந்தக் கருணைக்கண்ணைக் காட்டியருள்வான். இவ்வுண்மை

கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்றோர் திருப்பேர்கொண்டு....
... ...
ஆணவமான படலம் கிழித்(து)அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி...

(கந்தர் கலிவெண்பா)

என்றமையால் இனிதே உணரத்தகும். மேலும்

தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மில் தலைப்படுதல் தாம்உணரின் ....

என்ற திருக்களிற்றுப்படியாருக்கு (2) சிக்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை அவர்கள் செய்துள்ள உரையாலும் உணரலாம்.

எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல்

சரியையாதி சிவபுண்ணியங்களை இயற்றுவோருக்கே அன்றி ஏனையோருக்கு நினைப்பதற்கும் எட்டாத திருவடி. எனவே வாழ்த்துதற்கும் வணங்குதற்கும் எட்டாத திருவடி என்பது உணரத்தகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

இறைஞ்சி

இத்தகைய அரிய திருவடி தம்பொருட்டு எளிவந்து அருளும் பேரருளை உணர்ந்து வணங்கி,

இவ்வாறு புறத்தே எழுந்தருளி வந்த குருமணியின் திருவடிகளை வணங்கி, குருவருளால் மலமறைப்பு நீங்கிக் கருணைக் கண்ணாம் அருளை அகத்தே உணரப்பெற்று அந்த அருளாலே அவ்வருளுக்கு முதலாக அகத்தும் விளங்கும் பெருமான் திருவடியை வணங்குகின்றனர் வாதவூரடிகள். இவ்வுண்மை வரும் பகுதியால் நன்கு தெளிவாகும்.

சிவன்அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி

சிவனாகிய அக்கண்ணுதலான் என் அறிவில் நின்ற அத்தன்மையால் அவனது திருவருளாலே அவனுடைய திருவடிகளை வணங்கி.

"தெருளிடத்து அடியார் சிந்தையுட் புகுந்த செல்வமே சிவபெருமானே" என்பது பிடித்தப்பத்து. (4)

சிவன் அவன் - சிவனாகிய அக்கண்ணுதலான்.

என் சிந்தையுள் நின்ற - அடியேன் அறிவில் அருள் மயமாய் நிலைபெற்ற

அதனால் - அத்தன்மையால், அத்தன்மையாம் பெரும் பேற்றினால்.

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி - மலம்நீங்கித் தத்துவசுத்தி உற்றமையால் தத்துவக்கருவிகளால் வணங்காது அவன் திருவருளாலே அவன் திருவடியை வணங்கி.

"அவன்அருளால் அல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே
அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்"

என்பது சிவஞானபோதம் (10-ஆம் சூத்திரம் 2ஆம் அதிகரணம் ஏது).

'வணங்கி' என்னும் ஒற்றளபெடை செய்யுளோசை நிறைக்க வந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிந்தைமகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

சிந்தை மகிழ அடியேனது முன்னைவினை முழுவதும் ஓய, சிவபிரானது பழமையான முறைமையினை அடியேன் கூறுவேன்.

முந்தைவினை என்பது எடுத்துள்ள இப்பிறவிக்கு உரிய பிராரத்தம். அதுவும் அவன் அருளாலே அவன்தாள் வணங்கும் வாதவூரடிகளுக்கு வாதனை அளவிலேயே கொள்ளத்தகும். 'அவன் அருளாலே' என்பதை உரைப்பன் என்பதனோடும் கூட்டுக.

'சிவனவன்' என்பது தொடங்கி 'எழிலார் கழல் இறைஞ்சி' என்பது வரை உள்ள அடிகளைக் கொண்டு கூட்டுவதிலும் பொருளுரைப்பதிலும் உரைகளுக்கிடையே வேற்றுமைகள் உள்ளன. அவற்றை அந்தந்த உரைகளில் காணலாம்.

'மோய' என்று பாடம் கொள்ளுதலும் உண்டு. மோனை சிதைவதால் 'ஓய' என்னும் பாடம் பிழை என்று மறுக்க வேண்டாம். 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு' என்று மோனை இன்றியும் வந்துள்ளமை காண்க.

விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய்

விண்ணுலகம் முழுவதும் நிறைந்தும் மண்ணுலகம் முழுவதும் நிறைந்தும் அவற்றுக்கு அப்பாலும் நிறைந்தவனே. திகழும் ஒளிவடிவினனே.

'சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்' என்று பாடிய அடிகள் தொடர்ந்து 'விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்' என்று பாடுகின்றார். அருட்சார்புற்ற காலத்தில் ஆன்மாவானது தன்னில் விளங்கும் சிவனே உலகெங்கும் நிறைந்திருப்பதை உணரும் என்பர் பெரியோர். இதனை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

"அருள்நிலவும் காலம் - தன்னில் அவனே யாவுமாய்
நின்ற தொன்மை தாம் உணர்தலானும்"
என்னும் சிவப்பிரகாசத்தால் (36) நன்கு உணரலாம்.

எண் இறந்து எல்லை இலாதானே

எண்ணின் அளவினையும் கடந்து எல்லையின்றி விளங்குபவனே.

நின்பெரும்சீர் – பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்

உனது பெரும் சிறப்பினைப் பொல்லா வினைகள் உடைய அடியேன் புகழ்ந்துரைக்கும் நெறி ஒன்றையும் அறியாமல் உள்ளேன்.

எனவே நின் பெருஞ்சீரைப் புகழ்ந்து பாடுமாறு மேன்மேலும் அருளவேண்டும் என்பது குறிப்பு.

புல் ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்

பலவகையான புல்லாகியும், பூண்டாகியும், புழுவாகியும், மரமாகியும், மிருகங்களாகியும், பறவைகளாகியும் பாம்புகளாகியும், கல்லாகியும், மனிதர்களாகியும், பேய்களாகியும், கணங்களாகியும், வலிய அசுரராகியும், முனிவராகியும், தேவராகியும் இவ்வாறு படைக்கப்பட்டு வராநின்ற இந்த நிலையியற் பொருள், இயங்கியற் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளே எம்பெருமானே யான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விருகம் - மிருகம் என்ற வடசொல்லின் திரிபு. 'பல்' (பல) என்ற அடையை எல்லாப் பிறவி வர்க்கத்தோடும் கூட்டிக் கொள்ள வேண்டும். எறும்பினை எடுத்துக்கொண்டாலும் அதனினும் சிறிய நுண்ணுயிரியை எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொன்றிலும் எத்தனை எத்தனை வகை! இதன் மூலம் வினைகளில் நுண்ணிய பல பேதங்கள் இருப்பதை உய்த்துணரலாம். தாவரம் - ஸ்தாவரம் என்னும் வடசொல்லின் திரிபு. சங்கமம் - ஜங்கமம் என்னும் வடசொல்லின் திரிபு.

இங்குக் கூறப்பெற்ற புல் முதலிய பிறவிபேதங்கள் செய்யுள் நோக்கிப் பாடப் பெற்றுள்ளமையால் முறைமாறி இருக்கலாம். பரிணாம வளர்ச்சிக்கு ஏற்பப் பொருத்தமான வரிசையில் வைத்துப் பொருள் கண்டு கொள்ள வேண்டும்.

கல்

உயிர்கள் சாப வயப்பட்டுக் கல்லைச் சார்ந்து கிடந்துள்ளமை புராணங்களால் அறியத்தகும். இனி, கல் என்பதனை மலையாகக் கொள்ளுதலும் உண்டு. உயிர்கள் உடம்போடு கூடித் தோன்றுகின்ற பிறவிக்கு முன்பு மலையே இருந்தது; உயிர்கள் அம்மலைகளைச் சார்ந்து அணுக்களில் புலப்படாது கிடந்தன ; பின்னர் படிமுறை வளர்ச்சி கண்டு புல் முதலிய பிறவிகளாக வடிவு கொண்டன என்பர்.

'கல்லா மனிதராய்' என்று பாடங் கொள்ளுதல் பொருந்தாது. பழைய பதிப்புகளுள் இவ்வாறு பாடம் கொள்ளப்படவில்லை. நால்வகைத் தோற்றத்துள் அடங்கும் பிறவி பேதங்களைக் கூறிச் செல்கையில் இடையே சாபவயப்பட்டுக் கல்லாகக் கிடக்கும் நிலையினையும், பேயாய்த் திரியும் நிலையினையும் உடன் கூறினர். பேய் - சூக்கும உடம்பு மட்டும் கொண்டு அச்சம் தரும் நிலையில் உள்ளது. சிவ கணங்களைச் சேர்ந்த பேய் வேறு.

எல்லாப் பிறவி பேதங்களும் தாவரம் (நிலையியற் பொருள்) சங்கமம் (இயங்கியற் பொருள்) என்னும் இரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

கூறுகளுள் அடங்கும். புல், பூண்டு முதலியன தாவரங்கள். புழு, பாம்பு, பறவை, விலங்கு, மனிதர், தேவர் முதலிய யாவும் சங்கமங்கள்.

'கணங்கள்' என்றதனுள் பதினெண் கணங்களில் இங்கே எடுத்துரைக்கப்பட்ட தேவர், அசுரர், பேய் தவிர்ந்த ஏனையோர் அடங்குவர்.

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்

மீண்டும் மீண்டும் பிறந்து வினைப்பயன் நுகர்ந்து இறந்து வருதலால் ஏற்படும் இளைப்பு.

மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்

உண்மையாகவே உன் பொன்போன்ற திருவடிகளைத் தரிசித்து இந்த அனைத்துப் பிறவிகளிலிருந்தும் நிரந்தரமாக விடுபட்டேன்.

'இன்று' என்றது இப்பிறவியில் என்னும் கருத்தில். "இன்றெனக்கருளி இருள்கடிந்து..." என்னும் கோயில் திருப் பதிகம் (7) ஒப்புநோக்கத்தக்கது. "கண்ணார உய்ந்தவாறு அன்றே உன்கழல் கண்டே" என்பது திருவேசறவு (2).

'பொன் அடிகள்' என்றமையால் திருவடியே உண்மையான செல்வம் என்று உணர்த்தப்பெறுகின்றது.

எல்லாப் பிறப்பிலிருந்தும் வீடுற்றேன் என்றுரைத்த வாதவூரடிகள் அவ்வாறு வீடுறுவதற்குப் பெருமான் தம்மைப் படிமுறையில் பக்குவப்படுத்தியருளிய முறைமையை உரைத்தருள்கின்றனர்.

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா

அடியேன் உய்யும் பொருட்டு அடியேனது உள்ளத்துள் ஓங்காரரூபமாய் நின்ற மெய்ப்பொருளே!

முதலுற்பவம் தொட்டே அடியேன் உள்ளத்தில் ஓங்கார ரூபமாய் நின்று படிமுறையில் அடியேனைப் பக்குவப்படுத்தி அருளும் உண்மைப் பொருளே என்று போற்றுகின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'நின்ற' என்றது நின்று பக்குவப்படுத்தி அருள்தலைக் குறிக்கும்.

ஓங்காரமாய் நின்ற

உயிரின் அறிவு அனுபவங்களுக்கு அந்தக்கரணங்கள் இன்றியமையாதவை. அவை சித்தம், மனம், அகங்காரம், புத்தி என நான்காம். இவற்றால் அறியும் உயிர் புருடனாக விளங்கும். ஓங்காரமாகிய பிரணவத்துள் அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்னும் ஐந்து அக்கரங்கள் உள்ளன. இந்த ஐந்து அக்கரங்களே அந்தக்கரணங்களையும் புருடனையும் செலுத்துதற்குரியன. சிவபெருமானே அதிதெய்வங்கள் வாயிலாக ஓங்காரத்து அக்கரங்களைச் செலுத்தி அவற்றின் மூலம் அந்தக்கரணங்களையும் புருடனாகிய உயிரையும் செலுத்தியருள்கின்றான். இவற்றைச் சிவஞானபோதம் முதலிய சாத்திரங்களில் விளக்கமாகக் காணலாம்.

பெருமான் இவ்வாறு செலுத்தியருள்வதால் உயிர் அறிவு அனுபவங்களைப் பெற்றுப் படிமுறையில் பக்குவப் படுகின்றது. "ஓங்காரத்து உருவாகி நின்றானை" என்பது ஆளுடைய நம்பிகள் தேவாரம். (திருவலிவலம் - 1)

தன்நிலையில் திரிபின்றி ஓங்காரமாய் நின்று செலுத்தியருள்வதால் 'மெய்யா' எனப் போற்றினர்.

விமலா! விடைப்பாகா!

மலச்சார்பற்றவனே! அறவடிவாகிய ஏறு ஊர்ந்தவனே.

விமலன் - மலமற்றவன். வி - என்பது இன்மைப் பொருளுணர்த்தும் உபசர்க்கம் என்பர் வடமொழி வல்லார்.

வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வேதங்கள் ஐயா என்று அழைக்கவும் அவற்றுக்கு எட்டாமல் மேல் உயர்ந்தும், கீழ்ஆழ்ந்தும், புடைபரந்தும் அமைந்த நுண்மைப் பொருளாய் இருப்பவனே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இங்ஙனம் வேதங்களுக்கு எட்டாத பேரியல்புகளை உடைய பெருமான் ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பானாக இருத்தலை முன்னரே உரைத்துள்ளமை நினைவிற் கொள்ளத் தக்கது.

"மறையினான் அயனான் மாலான்...
... ... கூறொணாதாகி நின்ற
இறைவனார் கமல பாதம்"

என்று கூறும் சிவஞானசித்தியார்,

"அருளினால் ஆகமத்தே அறியலாம்"

என்று ஆகமத்தின் சிறப்பை உரைத்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இதற்குச் சிவஞான சுவாமிகள் தம் உரையில்

"... சிவாகமத்தின் அனுபவமுடைய தேசிகர் அருளிச் செய்யும் உபதேசத்தால் கேட்டறியலாம்" என்று உரைத்துள்ளமை "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்" என்னும் அருளுரையினை இனிது விளக்கி இது 'கேட்டல்' சார்ந்தது என்றும் உணரவைத்துள்ளமை அறிந்து போற்றத் தக்கது.

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா

வெப்பமானவனே, தட்பமானவனே, உயிரைத் தன் உருவமாகக் கொள்பவனாம் தூயோனே.

தணியாய் - தண்ணியாய் என்பதன் தொகுத்தல். 'தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்' என்று திருமந்திரம் கூறுதல் காணத்தக்கது. இதனால் மறக்கருணையும் அறக்கருணையும் உடையவன் என்ற உண்மை உணர்த்தப் பெற்றது.

இயமானன் - யஜமானன் என்னும் வடசொல்லின் திரிபு.

வேள்வித் தலைவனைக் குறிப்பினும் பொதுவாக உயிரைக் குறிக்கவும் பயன்படுத்தப்படும். "இயமானனாய் எரியுங் காற்றுமாகி" என்பது ஆளுடைய அரசுகள் திருவாக்கு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkat

(நின்ற திருத்தாண்டகம்-1). சிவபெருமானின் அட்ட மூர்த்தங்களுள் உயிரும் ஒன்று.

மலசகிதமாய் விளங்கும் உயிரோடு ஒற்றித்து நின்றும் அந்த மலச்சார்பு தனக்கு உறாது நின்மலனாய் விளங்குதல் உணர்த்தப்பெற்றது.

பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!

அடியேனுடைய பொய்யுணர்வு முதலாக வருகின்ற யாவும் நீங்கும் பொருட்டுக் குருமணியாக எழுந்தருளி வந்து அருள்புரிந்து அடியேன் அறிவில் மெய்ஞ்ஞானமாகி விளங்குகின்ற உண்மை ஒளியே.

வாதவூரடிகள் அறிவால் சிவனேயாக விளங்கி அருள்வதற்கு இது சிறந்த அகச்சான்றாகும். **"அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே"** என்பது பிடித்தபத்து (5).

பொய்யாயின எல்லாம்

பொய் என்ற சொல் நிலையற்றது என்னும் பொருளில் சைவ நூல்களில் ஆளப்பெறும். ஐம்புல போகம் 'பொய்' என்பதை **"பொய்யெல்லாம் மெய்யென்று புணர் முலையார் போகத்தே"** என்னும் அச்சோப்பதிகத்தாலும் (3), இந்த ஐம்புலபோகத்தில் உயிரை நிறுத்துகின்ற ஆணவ இருளும் 'பொய்' என்பதைப் 'பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே' என்னும் கோயில் திருப்பதிகத்தாலும் (3) உணரலாம். எனவே பொய்யுணர்வு சார்ந்து எழும் சொல், செயல், அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிப் 'பொய்யாயின எல்லாம்' என்றருளினர். **"பொய்யெலாம் விடத் திருவருள் தந்து"** என்பது அற்புதப் பத்து (1).

'நீங்க' என்பதனை வலியுறுத்தப் 'போய் அகல' என்றருளினர்.

மெய்ஞ்ஞானப் பேறு பெற்ற உயிர் சிவமாம் தன்மைப் பெருவாழ்வெய்தும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

எவ்வகையான அறிவும் இல்லாத அடியேனுக்குப் பேரின்பத்தை அருளும் பெருமானே.

எ+ஞானம் = எஞ்ஞானம். எஞ்ஞானமும் என்னும் முற்றும்மை தொக்கது.

உயிரால் தானாக ஒன்றை அறிய இயலாது. அம்மட்டோ! உயிரின் அறிவு தானாக விளங்கவும் மாட்டாது. உயிரிடம் நிகழும் அறிவு விளக்கம் பெருமானின் கருணை விளக்கமே ஆகும். இதனை உணராமல் யான் எனது என்று நிற்கும் அறிவை வாதவூரடிகள் அறிவாக மதிக்கவில்லை. எனவே 'எஞ்ஞானம் இல்லாதேன்' என்று குறிப்பிட்டனர். இருப்பினும் பெருமான் பரங்கருணையுடன் ஆட்கொண்டு முத்தி இன்பம் அருளினான் என்னும் கருத்தில் 'இன்பப் பெருமானே' என்று போற்றினர்.

"அறிவிலாத எனைப் புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளிமேல்
நெறியெலாம் புலமாக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானை..."

என்பது திருச்சதகம் (32).

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

அறியாமையை நீங்கச் செய்யும் நல்ல அறிவு மயமானவனே.

இருள் ஒளியால் மட்டுமே நீங்கும். அதுபோல உயிர்களின் அறியாமை சிவஞானத்தால் மட்டுமே நீங்கும்.

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்

தோற்றம், இருப்பு, அழிவு என்பன இல்லாதவனே. அனைத்து உலகங்களையும் தோற்றுவிப்பவனே, காப்பவனே,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒடுக்குபவனே. இத்தொழில்களுக்கு உட்படும் உயிர்களுக்கு அருள் வழங்குபவனே.

அளவு - இருப்பு. அதாவது ஒரு கால எல்லை வரையிலுமே இருத்தல்.

சிவபிரானே மும்மூர்த்திகளையும் அதிட்டித்து மூத்தொழில்களையும் அவர்கள் வாயிலாகச் செய்விக்கின்றார்.

ஆக்குதல், காத்தல், அழித்தல் என்னும் இம்மூன்று தொழில்களும் 'மறைத்தல்' தொழிலில் அடங்கும்.

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்

அடியேனையும் நீ இயற்றும் இத்தொழில்களுக்கு உட்படுமாறு செலுத்துவாய். இத்தொழில்களில் பட்டுப் பக்குவமுற்ற நிலையில் அடியேனை நின் திருவடித் தொண்டில் புகுமாறு செய்வாய்.

'என்னை' என்பது இடைநிலைத் தீவகமாக நின்று 'என்னைப் போக்குவாய்' எனவும் 'என்னைப் புகுவிப்பாய்' எனவும் இயையும்.

தொழும்பு - தொண்டு.

நாற்றத்தின் நேரியாய்; சேயாய்; நணியானே

பூவில் மணம் போல எங்கும் பொருந்தியிருப்பவனே. ஆயினும் நினையாதவர்க்குத் தொலைவில் இருப்பவனே. நினைந்து போற்றும் அடியார்களுக்கு அருகில் இருப்பவனே.

'நாற்றத்தின் நேரியாய்' என்பதற்கு,

'பூவில் நாற்றம் போன்றுயர்ந்து எங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை'

என்னும் திருவண்டப்பகுதி (115-116) விளக்கமாகத் திகழ்கின்றது. மூவர் தேவாரங்களிலும் இவ்வுவமையினைக் காணலாம்.

சேய்மை - தொலைவில் நிற்கும் நிலை. அதாவது மறைந்து நிற்கும் நிலை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

நணிமை - அருகில் நிற்கும் நிலை. அதாவது வெளிப்பட்டு நிற்கும் நிலை, என்று சிறப்பாகக் கருத்துரைப்பார் மகாவித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள்.

'சேய்த்தன்று நணித்தென்றார்' என்னும் பெரிய புராணப் பகுதி இச்சொல்லாட்சி குறித்து எண்ணத்தக்கது. (அப்பூதி அடிகள் புராணம்-8)

மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

வாக்கும் மனமும் அளவிடமுடியாது நீங்க அவற்றுக்கு அப்பாற்பட்டு நின்ற மறையவனே.

மாற்றம் - வாக்கு. இது பாசஞானத்தைக் குறிக்கும்.

மனம் - பசு ஞானத்தைக் குறிக்கும்.

மாற்றம் மனம் கழிய - பாசஞானமும் பசுஞானமும் அறிய முடியாமல் கழிந்து போக அவற்றுக்கு அப்பாற்பட்டு

நின்ற - பதிஞானத்தாலே அறியத்தக்கதாய் நின்ற .

மறையோனே

பதிஞானப் பேற்றுக்கு வழிகாட்டும் மறைகளை அருளியவன் என்பது கருத்து.

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

பசுவிடத்துக் கறந்த பாலில் சர்க்கரையும் தேனும் கலந்தபோது மிகுந்த இனிமை தந்தாற்போல அடியார் சிந்தனையுள் சிறந்து தேன் போல இனிமை ஊற்றெடுக்குமாறு நிலைபெற்று அவ்வடியாரது எடுத்த பிறப்பினை நீக்கியருளும் எங்கள் பெருமானே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கன்னல் - சருக்கரை. "சருக்கரை, கரகம், நாழிகை, வட்டில், உரைக்கின் குடம், இக்கு, நாழிகையும் கன்னல்" என்பது திவாகரம் (நிகண்டு).

'நெய்' என்பது 'தேன்' என்றும் பொருள்படும். 'நேமியிற் செல்லும் நெய்க்கண் இறாஅல்' என்னும் மலைபடுகடாம் அடியில் (525) இடம்பெற்றுள்ள 'நெய்' என்னும் சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'தேன்' என்று இயைபுறப் பொருளுரைத்துள்ளார்.

'தேனூறி நின்று' என்பதிலுள்ள 'தேன்' இனிமை என்ற அளவில் பொருள்தரும்.

பிறந்த பிறப்பறுத்தல் - எடுத்த பிறப்பில் சீவன் முத்தராக்கி மேற்கொண்டு பிறவி வராத வண்ணம் அருளுதல்.

இயல்பாகவே இனிமை தருவதாகிய பால், சருக்கரையும் தேனும் கலந்தபோது மிகுந்த இனிமை தருதல்போல அடியார் சிந்தனையுள் மிகுந்த இனிமை ஊற்றெடுக்குமாறு அருள்கின்றான்.

அந்த இனிமையில் உருகும் அடியார்கள் ஏனைப் பற்றுக்களை முற்றிலும் விடவே அவர்களின் பிறப்பறுத்துச் சீவன் முத்தராக்கி அருள்கின்றான்.

பலவும் பயனுள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம் மயில் காமுறு பேடையொடாடிக்
குலவும் பொழில் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
நிலவும் பெருமானடி நித்தல் நினைந்தே

என்னும் ஆளுடையபிள்ளையார் தேவாரத்தால் (குரங்கணில் முட்டம் :6) இவ்வுண்மை அறித்தகும்.

நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்

ஒப்பற்ற ஐந்து நிறங்களை உடையவனே.

இறைவனது அட்டமூர்த்தங்களுள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும் அடங்கும். இவை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

முறையே பொன்மை,வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்னும் நிறங்கள் உடையன. இந்நிறங்களை இறைவன் மீது ஏற்றி உரைப்பர்.

சதாசிவ மூர்த்தியின் திருமுகங்கள் ஐந்து. அவை ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. இந்த ஐந்து திருமுகங்களும் முறையே படிகம், பொன், கருமை, செம்மை, வெண்மை என்னும் நிறங்களுடையன என்று சிவாகமங்கள் கூறும். இதுபற்றி 'நிறங்கள் ஓர் ஐந்துடையாய்' எனக் கொள்ளுதலே சிறப்பாகும்.

விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய்

தேவர்கள் உன்னைப் போற்றவும் அவர்களுக்கு வெளிப்படாமல் மறைந்திருந்தவனே.

தேவர்கள் வரம்பெற்றபின் செருக்குற்றுத் தம்மையே தனி முதலாகக் கருதும் மனப்பான்மை உடையவர்கள். எனவே அவர்கள் ஏத்தினாலும் பெருமான் மறைந்திருக்கின்றான். 'விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசு மலர்ப்பாதம்' என்பது திருவெம்பாவை (2)

எம்பெருமான், வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

எம்பெருமானே! வலிய வினைகளை உடைய அடியேனை மறையும்படி மூடிய மாயம் பொருந்திய ஆணவ இருளை, நல்வினை, தீவினை என்னும் அரிய கயிறுகளால் கட்டி, வெளியே தோலினைப் போர்வையாகப் போர்த்து அதனால் உடம்பெங்கும் உள்ள புழுக்களையும், அழுக்கையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெளித்தோன்றாமல் மறைத்து, அழுக்குகளையே சொரியும் ஒன்பது வாசல்களை உடைய உடம்பாகிய குடிசையை, அது கலங்கும் வண்ணம் பொறிகள் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய மறைந்திட மூடிய மாய இருள்

கேவல நிலையில் ஆணவமலம், ஆன்ம அறிவு சிறிதும் விளங்காதவாறு அதனை முற்றிலுமாக மறைத்திருக்கும். இதனை,

"மாமணியை உள்ளடக்கும் மாநாகம் வன்னிதனைத்
தானடக்கும் காட்டத் தகுதியும் போல் - ஞானத்தின்
கண்ணை மறைத்த கடிய தொழில் ஆணவத்தால்...."

என்னும் போற்றிப்பஃறொடையால் (9-10) அறியலாம். (வன்னி - நெருப்பு; காட்டம் - விறகு)

புற இருள் பொருள்களை மறைத்தாலும் தன்னை மறைக்காது. ஆணவ இருளோ உயிரையும் இறைவனையும் மறைத்தலோடு அன்றி அவ்வாறு மறைக்கும் தன்னையும் காட்டாது. எனவே 'மாய இருள்' என்றனர். திருவருட்பயன்(23).

அருங்கயிற்றால் கட்டி

அறம் பாவம் என்னும் இருவினைக் கயிற்றால் கட்டப்படுவது உயிரே என்றாலும் அவ்வுயிர் ஆணவ இருள் மயமாய் நிற்றலால் "இருளை... கட்டி" என்றனர். இவ்வாறு கட்டுவது அவ்விருள் மறைப்புப் படிமுறையில் நீங்கும் பொருட்டாம். அதுவரையில் வினைக்கள் நீங்காமல் தொடருதலால் 'அருங்கயிறு' என்றனர்.

'புலன்' என்றது ஆகுபெயராய்ப் பொறியைக் குறித்தது. ஐம்பொறிகள் ஆன்ம உணர்வு நிகழவொட்டாமல் புலனின்பங்களையே நாடுமாறு மயக்குவன. அவ்வின்பங்களையே நாடிப் பெறற்கரிய மனிதப்பிறவி கழிந்து விடுதலால் பொறிகளின் செய்கை வஞ்சனை என்பது புலனாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

'புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி' போன்ற அடிகளால் மாயாகாரிய சரீரத்தின் இழிவை உணர்த்தி அருளினர். அதன்மூலம் ஐம்புலபோகங்களின் தாழ்வை உணரலாம். தாழ்ந்த போகங்களை உயர்ந்தவையாகக் காட்டிப் பொறிகள் மயக்குகின்றன. எனவே அவற்றின் செயல் 'வஞ்சனை' என்பது தெளிவு.

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்துஅருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயின் சிறந்த தயாவான தத்துவனே

(அவ்வாறு பொறிகள் செய்யும் வஞ்சனையில் சிக்கி) நெறிபிறழும் மனத்தால் விமலனே! உன்னிடத்துக் கலந்த அன்புடையவனாகி மனம் கசிந்து உருகும் நலம் சிறிதும் இல்லாத சிறியேனுக்கும் மெய்ந்நெறி காட்டிச் சிறியேனைப் பக்குவப்படுத்தி, நிலவுலகில் குருமணியாக எழுந்தருளி நீண்ட திருவடிகளைக் காட்டி, (பிறப்பறுத்துச் சிவபோகம் அருளி) நாயினும் இழிவாகக் கிடந்த அடியேனுக்குத் தாயினும் சிறந்த கருணை வடிவான மெய்ப்பொருளாய் உள்ளவனே.

விலங்குமனத்தால் - நெறிபிறழும் மனத்தால்.

"புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய விலங்கு மனத்தால்" என்றதற்கேற்ப

"மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான்உன் மணிமலர்த்தாள்
வேறுபட்டேனை"

என்று நீத்தல் விண்ணப்பத்தில் (11) அருளியுள்ளமை காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'விமலா உனக்குக் கலந்தஅன்பாகி' என்ற இடத்தில் 'உனக்கு' என்பதற்கு 'உன்னிடத்தில்' என்று பொருள்காணப் பட்டது. உருபு மயக்கம்.

விமலனிடத்துக் கலந்த அன்பாகி உள்ளம் கசிந்து உருகுதலே உயிருக்கு நலமாகும். இதனால் மலநோயின் வலிமை குன்றுவதால் இது நலமென்பது தெளிவு. அன்பு வளர்த்து உள்ளம் கசிந்துருகும் நலம்பெறுவதற்குப் பெருமானைப் பாடுதல் நல்ல வழிமுறை. "நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழ" என்பது திருவெம்பாவை (17)

'கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும் நலம்தான் இலாத சிறியேற்கு' என்றாற்போல

"கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமாறு அறியா
மருளனேன்"

என்று வாழாப்பத்தில் (7) அருளியுள்ளமை காணலாம்.

நீள்கழல் - பெருமையாலும், கருணையாலும், புகழாலும் நீண்ட திருவடி.

"நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத் தாயிற் பெரிதும் தயாவுடைய தம்பெருமான்"

என்னும் திருப்பூவல்லி (3) எண்ணத்தக்கது.

மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே

களங்கமற்ற ஒளியே இதழ்களாக விரிந்த மலரின் ஒளிபோன்றவனே. ஞான மயமானவனே. இனிமை நிறைந்த அமுதம் போன்றவனே. சிவபுரத் தலைவனே. பாசமாகிய ஒவ்வாத பற்றினை நீக்கி உயிர்களை வளர்க்கும் குருநாதனே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

'மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே' என்றது பரமாசாரியரது தோற்றப் பொலிவை வர்ணித்துப் பாடியதாகும். தேசன் - ஞானஒளிமயமானவன். சிவபுரம் - சிவலோகம். 'ஒருவன் உருத்திரலோகன்' என்பர் ஆளுடைய நம்பிகள். (திருவாரூர் - கரையும் கடலும்...)

பாசமாகிய மும்மலங்களின் பிணிப்பை அறுத்து உலக இச்சையைத் தீர்த்து அடியார் கூட்டத்தில் சேர்த்து வளர்த்தருளுதல் ஞானாசிரியர் செய்யும் அருட்செய்கையாம். "பாசமானவை பற்றறுத்து உயர்ந்ததன் பரம்பெரும் கருணையால் - ஆசை தீர்த்து அடியார் அடிக் கூட்டிய அற்புதம் அறியேனே" என்னும் அற்புதப்பத்தால் (8) இவ்வுண்மை அறியத்தகும்.

பாரிக்கும் - வளர்க்கும். "பகலென்னும் பண்பின்மை பாரிக்கும் நோய்" என்பது திருக்குறள் (851). ஆரியன் - மேலோன். 'மூலமாகிய மும்மலம் அறுக்கும் - தூயமேனி சுடர்விடு சோதி' என்று பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனைக் கீர்த்தித்திருஅகவலில் போற்றியுள்ளமை (111-112) எண்ணத்தக்கது.

நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே

உன்னிடத்து அன்பு செய்வதற்கு ஏதுவாகிய திருவருளைச் செய்து அதன்மூலம் அடியேனது நெஞ்சத்தில் வஞ்சனை கெட அடியேன் நெஞ்சத்தில் நீங்காமல் நிலைபெற்ற பெருங்கருணையாகிய பெரிய ஆறு போன்றவனே.

நேச அருள் - தன்னிடம் நேசம் செய்வதற்கு ஏதுவாகிய திருவருள். உயிர்கள் தன்பால் அன்பு செய்வதற்கு ஏதுவாகச் சிவபிரான் திருவருள் புரிகின்றார்.

நேசம் - அன்பு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

" அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்"

என்னும் கோயில் திருப்பதிகத்திலும் (2), "பொறுப்பரிய பேரன்பை அருளி" என்னும் சிவஞான சித்தியாரிலும் (297) இவ்வுண்மையை அறியலாம்.

வஞ்சம் - தன்முனைப்பு. சிவநேயம் வளரவளரத் தன்முனைப்பாகிய வஞ்சம் கெடும். அனைத்திற்கும் சிவனே கர்த்தாவாக இருக்கவும் உயிர் தன்னைக் கர்த்தாவாகக் கருதுதல் வஞ்சனையாகும்.

பேராது - பெயராது என்பதன் திரிபு. "பேரா இயற்கை தரும்" (குறள் - 370). "பேராதென் சிந்தை இருந்தார் தாமே" (திருத்தாண்டகம் - திருப்பழனம் - 8).

சீடன் தன்மீது அன்பைப் பெருக்கி அதன்மூலம் வஞ்சனையைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு அவன் நெஞ்சினில் பெருங்கருணைப் பேராறாகக் குருமணி நீங்காமல் விளங்கி அருள் செய்கின்றார். இந்த வஞ்சனையே வினைக்கு வேராகும். பெருங்கருணைப் பேராற்றின் ஓட்டத்தில் வஞ்சனை வேரோடு இருவினை மரங்கள் பறித்தெறியப்படும் என்க.

செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட...
... ...
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து

என்னும் திருவண்டப்பகுதி சிந்திக்கத்தக்கது. (77-87)

ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதம் போன்றவனே. எல்லையற்ற இயல்புடைய பெருமானே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

நின்னை ஆராய்ந்து தெளியாதோர் உள்ளத்தில் வெளிப்படாது மறைந்திருக்கும் ஒளிவடிவினனே.

ஆராத இன்பமாக அவனே இருத்தலின் 'ஆரா அமுதே' என்றனர். 'அளவிலாப் பெம்மானே' என்றது பெருமானின் இயல்புகள் அளவிடற்கரியனவாய் எல்லையின்றி விளங்குதலை உணர்த்துகின்றது. பெருமானின் அறிவிற்கும் ஆற்றலுக்கும், அருளுக்கும் எல்லை இல்லை.

"ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்"

என்னும் திருமந்திரம் சிந்திக்கத்தக்கது. (95)

. பெம்மான் - பெருமான்.

ஒளிக்கும் ஒளியானே

ஞான நூல்களைக் கேட்டு, சிந்தித்து சிவபிரான் அருளை ஆராய்ந்து தெளியவேண்டும். அவ்வாறு ஆராயாதார் உள்ளத்தில் அவன் வெளிப்படுதலில்லை. மறைந்திருக் கின்றான். எனினும் அவர்கள் வினைக்கீடான விடயங்களை அறியத்தக்க முறையில் அவற்றைக் காட்டும் ஒளிபோன்று இருக்கின்றான். எனவே "ஒளிக்கும் ஒளியானே" என்று போற்றினர்.

"ஓராதார் உள்ளத்தின் நில்லார்தாமே"
(திருத்தாண்டகம் - திருப்பழனம் - 8)

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே.

அடியேன் அறிவினை நீர்போல உருகச் செய்து அரிய உயிருக்கு உயிராய் நின்றவனே. இன்பமும் துன்பமும் இல்லாதவனே ; உள்ளவனே. அன்பருக்கு அன்பனாக உள்ளவனே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீராய் உருக்கி

உயிரானது சிவபிரான் திருவருளை நினைந்து போற்றி உருகி யான் எனது என்னும் செருக்கிலிருந்து படிமுறையில் விடுபடும். பேரன்பு பெருக்கித் திருவருளோடு ஒன்றாகி இந்தத் திண்ணிய செருக்கிலிருந்து முற்றிலுமாக விடுபட்ட நிலையே நீராய் உருக்கப் பெற்ற நிலையாகும். எனவே 'நீராய் உருக்கி' என்பதனால் திருவருளோடு உயிர் ஒன்றாதலாகிய 'ஏகனாதல்' குறிப்பிடப்பெறுகின்றது.

என் ஆருயிராய் நின்றானே

திருவருளோடு ஒன்றான உயிர் சிவம் தன் உயிர்க்குயிராய் நிற்றலைத் தெளிவாக உணரும்.

சிவம் உயிர்க்குயிராய் நிற்றலை அனுபவத்தில் உணர்ந்த உயிர் தன் செயல்யாவும் சிவன் செயலே என்றும் உணரும். இந்நிலை 'இறைபணி நிற்றல்' எனப்படும். உடம்பின் செயல் யாவும் அவ்வுடம்பை இயக்கும் உயிரின் செயலாதல் போல உயிரின் செயல்யாவும் உயிர்க்குயிராம் முதல்வன் செயலேயாம் என நிற்றல் இறைபணி நிற்றலாம்.

எனவே "நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே" என்பதால் ஏகனாகி இறைபணி நிற்குமாறு பெருமான் உயிருக்கு அருள்செய்யும் திறத்தினை உணரலாம்.

"... சிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும்...."

என்னும் திருத்தெள்ளேணம் (3) இங்கு நினையத்தக்கது.

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

இன்பமும் துன்பமும் வினைப்போகங்கள். இயல் பாகவே பாசங்களின் நீங்கிய சிவபிரானுக்கு அவ்வனுபவங்கள் இல்லை. இருப்பினும் தன்னிடத்து ஏகனாகி இறைபணி நிற்கும் உயிருக்கு ஊழாக வரும் இன்பத் துன்பங்கள் அவ்வுயிரைப் பிணிக்காத வண்ணம் தனக்கு வந்ததாகத் தான் ஏற்றுக்கொள்கின்றான். எனவே இறைபணி நிற்போருக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

வரும் இன்பத்துன்பங்கள் உடல் ஊழாகக் கழிகின்றன. உயிரை வருத்தாத வண்ணம் வினைப் போகங்களைத் தடுத்து உடல் ஊழாகக் கழியச்செய்தலே முதல்வன் ஏற்றுக் கொள்கின்றான் என்பதன் கருத்தாகும். அனுபவிக்கின்றான் என்று கொள்ளலாகாது.

ஆகையால் இன்பமும் துன்பமும் இல்லாத பெருமான் தன் அன்பர்களுக்கு வரும் இன்பத்துன்பங்களைத் தனக்கு வந்ததாக ஏற்றுக்கொள்ளுதலே 'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே' என்பதன் கருத்தாகும்.

"... ... திருவாஞ்சியத்து உறையும்
ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலிய ஒட்டாரே"
(ஏழாம் திருமுறை - திருவாஞ்சியம் -1)

"அவன்இவனாய் நின்றமுறை ஏக னாகி
அரன்பணியின் நின்றிடவும் அகலும் குற்றம்
சிவனும்இவன் செய்தியெலாம் என்செய்தி என்றும்
செய்தது எனக்கு இவனுக்குச் செய்தது என்றும்
பவம்அகல உடனாகி நின்றுகொள்வன்"
என்பது சிவஞானசித்தியார் (10ஆம் சூத்திரம்).

அன்பருக்கு அன்பனே

இறைபணி நிற்கும் அன்பர்களை மட்டும் வினைப் போகம் தாக்காமல் காத்து ஏனையோரை அப்போகங்களில் செலுத்துதல் பாரபட்சமுடைய செயலாகாதோ எனில் ஆகாது. யாவராயினும் இறைபணி நின்று அன்பர்களாகத் திகழ்வாரேயானால் அவர்களையும் வினைப்போகங்களிலிருந்து காத்தருள்வான். யாரேனும் இறைபணிநிற்கும் ஆர்வம் மேற்கொண்டால் அவர்களை சரியையாதி நெறிகளில் விரைவாகப் பக்குவப்படுத்திக் குருவருள் புரிவான். எனவே "அன்பருக்கு அன்பனே" எனப் போற்றினர்.

"சலமிலனாய் ஞானத்தால் தனைஅடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன்அவர் தாம்செய்வினை தன்னால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நலமுடனே பிறர்செய்வினை ஊட்டி ஒழிப்பானாய்
நணுகாமல் வினைஅவரை நாடிக் காப்பன்"

என்று சிவஞானசித்தியார் (307) கூறுவது 'அன்பருக்கு அன்பனே' என்பதன் இனிய விளக்கமாகும்.

... யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

எல்லாப் பொருள்களுமாகியும் அவை அல்லவுமாகியும் விளங்கும் ஒளியோனே. செறிந்த இருளாய் உள்ளவனே. புலப்படாத பெருமை உடையோனே. எல்லாவற்றுக்கும் முதலாக உள்ளவனே. முடிவும் நடுவுமாகி இவை மூன்றும் அல்லாதவனுமாய் உள்ளவனே.

'யாவையுமாய்' என்றது எல்லாப் பொருள்களிலும் கலந்துள்ள கலப்புப் பற்றி அவையேயாதல்.

'அல்லையுமாம்' என்றது பொருள் தன்மையால் அவை அல்லாது தானே யாதல்.

கண்ணுக்கு விளக்கம் செய்யும் ஒளிபோல் உயிர்களின் அறிவுக்கு விளக்கம் செய்தலின் 'சோதியனே' என்றும், இருப்பினும் உயிருக்குப் பக்குவம் வரும் காறும் திரோதான சத்திரூபமாய் நின்று தன்னைக் காட்டாமல் நிற்றலின் 'துன்னிருளே' என்றும்,

எல்லா உயிர்களின் அறிவிச்சை செயல்களுக்கும் தானே முதலாக விளங்கியும் அப்பெருமை சிறிதும் தோன்றாதவாறு மறைந்து நிற்றலின் 'தோன்றாப் பெருமையனே' என்றும் போற்றுகின்றனர்.

'துன்னிருளே தோன்றாப் பெருமையனே' எனக் கூட்டி, செறிந்த ஆணவ இருள் அணுகாத பெருமை யுடையவனே - எனப் பொருள் கொள்வாரும் உளர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

'சோதியனே துன்னிருளே' என்றதற்கேற்ப "சோதியுமாய் இருள் ஆயினார்க்கு" என்று திருப்பொற் சுண்ணத்தில் (20) போற்றியுள்ளமை காணத்தக்கது.

ஆதியனே அந்தம் நடுவாகி - படைப்பவனாகவும், ஒடுக்குபவனாகவும் இடையே நிலைபெறச் செய்பவனாகவும் இருந்து கொண்டே

அல்லானே - இவ்வாறு தொழில் செய்வோன் அல்லாதவனாக இருப்பவனே.

நாம் ஒரு சிறிய தொழிலைச் செய்யும் போதும் நம் நிலையில் விகாரமடைவோம். அதாவது மாற்றமடைவோம். ஆனால் சிவபிரான் அலகிலா உயிர்களிடத்தில் ஐந்து பெருந்தொழில்களைச் செய்தாலும் தன் நிலையில் சிறிதும் விகாரமடைவதில்லை. கருவி கரணங்களால் தொழில் செய்யாமல் சங்கற்ப மாத்திரையால் செய்கின்றான். ஒருவேளை ஐந்தொழில்களையும் செய்யவில்லையெனில் எப்படி விளங்குவானோ அப்படியே செய்யும் போதும் விளங்குகின்றான். ஐந்தொழில் செய்தலுக்கும் அப்பாற்பட்டு விளங்குதல் சிவபிரானுக்குச் சொரூப இயல்பாகும். 'ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே' என்பதால் சிவபிரானின் சொரூப இயல்பு உணர்த்தப்பெறுகின்றது. 'இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே' என்பது சிவஞான சித்தியார். (90)

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்கு அரிய நுண்உணர்வே

அடியேனை வலிய இழுத்து ஆளாகக்கொண்ட என் தந்தையாகிய பெருமானே. கூரிய உண்மை ஞானத்தால் சிவமே கதி எனக்கொண்டு அறிவோர்களுக்கும் தம் கருத்தினால் அறிவதற்கு அரிய அறிவுடையோனே. எத்துணை நுணுகி அறிதற்கும் அரிய நுண்ணிய அறிவுப்பொருளே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை' என்றமையால் பெறப்படும் உண்மையாவது.

உயிராகிய மைந்தன் ஐம்பொறிகளாகிய வேடர்க ளோடும் கூடித் தன் தகுதிக்கு ஒவ்வாத தொழில்களைப் பயின்றுவர, சிவபிரானாம் தந்தையாகிய மன்னவன் திருவுளம் இரங்கித் தன் ஞானோபதேசத்தால் உயிராம் மைந்தனை ஈர்த்துத் தன்மயமாக்கி ஆட்கொள்ளும் பேரருளாம் என்க.

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின் நோக்கரிய நோக்கே

கூரிய மெய்ஞ்ஞானமாம் சிவஞானத்தால் சிவமேகதி என்றும் உலகம் கானல்நீர் என்றும் கொண்டு சிவதரிசனம் செய்வோரும் தம்மை ஞாதிரு (அறிவோன்) என்று கொள்ளும் கருத்தினால் அறிவதற்கு அரிய ஞானப்பொருளே.

"காண்பானும் - காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன் வாட்டும் நெறி வாரா தவர்"

என்னும் வினாவெண்பா (11) எண்ணத்தக்கது.

எத்துணை நுணுகி அறியமுற்பட்டாலும் தற்போதத்தால் அறிதற்கரியவன். அருளோடு ஒற்றுமைப்பட்டு ஏகனாகி நிற்போருக்கே அறிய வருவான்.

போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய்
நின்ற தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்

போதலும் வருதலுமாகிய புடைப்பெயர்ச்சியும் அனுபவமும் இல்லாத புண்ணியனே! காக்கின்ற எங்கள் காவலனே. காண்பதற்கரிய பேரொளி வடிவினனே! இன்ப ஆற்றின் வெள்ளமே! எம் தந்தையே! யாவரினும் மேலானவனே! நிலையான தோற்றத்தினை உடைய விளங்குகின்ற ஒளியாயும், வரையறுத்துச் சொல்லுதற்கு இயலாத நுண்ணிய உணர்வாயும் (இருந்தும்).

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

வியாபகப் பொருளாகிய சிவத்திற்குப் போதல் வருதலாகிய புடைப்பெயர்ச்சி இல்லை. எய்துவார்க்கு இன்பம் ஈயும் அவனுக்கு எவ்வித அனுபவமும் இல்லை. தன்னை நண்ணிய புண்ணியத்தினால் உயிர்கள் மேலான போகம் நுகரத்தக்க புண்ணியனாக உள்ளான்.

'எம் காவலனே' என்றமையால் அடிகளைப் போன்ற சிவஞானிகளைக் காக்கும் காவலனாக விளங்கும் சிறப்பு உணர்த்தப்பெறுகின்றது. சிவஞானிகளைக் காக்கும் சீர்மையினை "கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க்(கு) அல்லால் - எடுத்துச் சுமப்பானை இன்று" என்னும் திருவருட் பயனால் (65) உணரலாம்.

'காண்பரிய பேரொளியே' என்றது சிவஞானிகளை அன்றி ஏனையோர்க்கு அறிதற்கரிய பெருநிலையினை உணர்த்துகின்றது. அடிகளைப் போன்ற சிவஞானியர்க்கோ தடக்கையின் நெல்லிக்கனி போன்று (திருவண்டப்பகுதி - 162) எளிவந்த தன்மையனாம்.

'இன்ப ஆற்றின் வெள்ளமே' என மாற்றி உரைக்க வேண்டும். அன்பெனும் ஆறு கரையது புரண்டால் ஈசனும் இன்ப ஆற்றின் வெள்ளப் பெருக்காய் வருவான்.

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே

'மாற்றங்களைக் கொண்ட உலகத்தில் வேறுவேறாகக் காணப்பட்டு வந்து முடிவில் அறிவாகத் தெளியப்படுவோனே. கேட்டு, சிந்தித்து, தெளிதலால் விளங்கும் தெள்ளியனே. அடியேன் சிந்தனையுள் ஊற்றாகச் சுரக்கின்ற உண்பதற்கினிய அரிய அமுதமே! உயிர் உலகங்களை உடையவனே!

உயிர்கள் புரியும் வினைகளுக்கு ஏற்ப உலகச் சூழல்களில் மாற்றங்கள் நேர்கின்றன. வெவ்வேறான சூழல்களில் உயிர்களுக்கு வெவ்வேறு நெறிகள் சார்ந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பல்வேறு தெய்வங்களை அவை வழிபடுகின்றன. படிமுறையில் பக்குவமெய்தி முடிவில் ஞானமயமான சிவமே பரம்பொருள் என்னும் தெளிவைப் பெறுகின்றன. சிவநெறி ஒழுகி முன்னேறிக் குருவருளால் கேட்டுச் சிந்தித்து தெளிதல் அனுபவத்தில் சிவபிரானை உணர்கின்றன. அவ்வாறு தெளிதல் அனுபவம் பெற்ற தம் அறிவில் பெருமான் அமுதாக ஊற்றெடுத்து இன்பஅனுபவம் விளைத்தலை இனிதாக உணர்த்தியவாறு.

உடையானே - என்றது உலகங்களை உடமையாகவும், உயிர்களைப் பெத்தம், முத்தி இரண்டிலும் அடிமையாகவும் உடையவன் என்னும் கருத்தில்.

வேற்று விகார விடக்கு உடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்துஇருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டு அழிக்க வல்லானே.

வேறுபட்டதும், மாறுபாடுகள் உறுவதும், தசைத் திரளானதுமான உடம்பின் உள்ளே அடைபட்டுக் கிடக்கப் பொறுக்கிலேன்; எம் தலைவனே! பாசங்களை அரிப்பானேயோ என்று பலகாலும் போற்றிப் புகழ்ந்து பூசித்திருந்து அசத்தாகிய உலகச்சார்பு நீங்கப்பெற்று சத்தாகிய சிவச்சார்பினை உற்றுச் சிவமாம் தன்னைப் பெற்றவர்கள் மீளவும் இப்பூவுலகிற்கு வந்து வினை அனுபவத்திற்கும் மேல்வினை ஈட்டத்திற்கும் நிலைக்களமான பிறவியைச் சாராத வண்ணம் கள்ளப் புலன்களைச் சாரும் குடிசையாம் உடம்பின் பந்தத்தினைப் போக்க வல்லவனே.

'வேற்று விகார விடக்கு உடம்பு' என்ற தொடர் வேற்று உடம்பு, விகார உடம்பு, விடக்கு உடம்பு என்று தனித்தனியே இயைத்துப் பொருள் கொள்ளத்தக்கது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வேற்று உடம்பு

உயிரின் இயல்போடு வேறுபடும் இயல்பு கொண்ட உடம்பு.

"சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறாகலின்..." *என்பது பரிமேலழகருரை. (குறள் - 338)*

விகார உடம்பு

பல்வேறு மாற்றங்களை அடையும் உடம்பு. குழந்தை, சிறுவன், இளைஞன், முதியவன் என்னும் மாற்றங்களையும், தட்பவெப்பம், நோய் முதலியவற்றால் ஏற்படும் மாற்றங்களையும், உயிர் அஞ்சவத்தை எய்துதலால் ஏற்படும் மாற்றங்களையும் எண்ணிப் பார்த்தால் 'விகார உடம்பு' என்பதன் பொருள் ஆழத்தை அறியலாம்.

விடக்கு உடம்பு

தசைத்திரளாகிய உடம்பு. ஊன் உடம்பு. 'புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்குமூடி' என்று உரைத்தருளி யுள்ளதை நினைவு கூரவேண்டும்.

உடம்புக்குத் தேவையான போகங்களை வேண்டுதலே வழிபாட்டின் நோக்கம் என்று கொள்வர் உலகத்தார். அவ்வாறின்றி இம்முறையில் வழிபடுதல் எப்போது கைகூடும் எனில் உடம்பு வேறு, உடம்பினுள் இருக்கும் உயிர்வேறு, உயிரே நான்; எனக்கு உகந்த சார்பு சிவச்சார்பே என்னும் தெளிவு உண்டாகும்போதே கைகூடும்.

'உடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்' என்று பாடுவதன் மூலம் உடம்பின் வேறு பொருளாய் அதன் உள்ளிருக்கும் உயிரே தாம் என்னும் தெளிவுணர்ச்சியோடு பாடியுள்ளமை புலனாகும். உடல் சார்பு ஒவ்வாதது என்னும் உண்மை 'வேற்று விகார விடக்கு உடம்பு' என்றமையால் தெளிவாகும். 'மெய்யானார்' என்றமையால் சிவச்சார்பே உயிருக்கு உகந்தது என்பது தெளிவாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொய்கெட்டு மெய்யானார்

'பொய்' என்பது 'அசத்து' என வழங்கப்படும். இது நிலையற்ற உலகினைக் குறிக்கும். 'மெய்' என்பது 'சத்து' என வழங்கப்படும். இது நிலையான சிவபரம்பொருளைக் குறிக்கும். பொய்கெட்டு மெய்யாதல் - அசத்தின் சார்பாம் பெத்த நிலையின் நீங்கி, சத்தின் சார்புற்றுச் சத்தாகிய சிவமாதல். இது சிவபிரானே ஞானாசிரியனாக எழுந்தருளி வர அவன் குருவருளால் சாதிக்கத்தக்கது.

கள்ளப்புலக்குரம்பை - கள்ளப் புலன்களைச் சாரக்கூடிய ஐம்பொறிகளின் குடிசை.

பொய்கெட்டு மெய்யான சீவன் முத்தர்க்கு உடம்பானது மலவாதனைக்கு இடமாவதால் அதனைக் 'கட்டு' என்றருளினர். 'செடியாய உடல் தீர்ப்பான்' என்பது ஆளுடையபிள்ளையார் வாக்கு. (திருப்புள்ளிருக்கு வேளூர்-110)

கள்ளப்புலக் குரம்பை கட்டழிக்கும் வல்லமை பிறவா யாக்கைப் பெரியோனாம் சிவபிரான் ஒருவனுக்கே உரியது.

நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென் பாண்டி நாட்டானே

செறிந்த இருளில் திருக்கூத்தினைப் பலகாலும் ஆடுகின்ற தலைவனே! தில்லைத் திருத்தலத்தில் திருச்சிற்றம் பலத்தில் திருக்கூத்து ஆடுவோனே! தெற்கே உள்ள பாண்டி நாட்டினனே!

நள்ளிருள் - செறிந்த இருள். 'நள்' என்பது 'நளி' என்பதன் பகுதி. "நளியென் கிளவி செறிவுமாகும்" என்பது தொல்காப்பியம். (சொல். உரி: 25) "நளி இரு முந்நீர்" என்ற தொடருக்கு '(நீர்) செறிந்த பெரியகடலின்' என்று பழைய உரையாசிரியர் பொருளுரைத் துள்ளமை காணத்தக்கது. (புறநானூறு - 66)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இங்கு, 'செறிந்த இருள்' என்பது உலகங்கள் யாவும் ஒடுக்கப்பட்ட பேரூழிக் காலத்தைக் குறிக்கின்றது. அப்போது உயிர்கள் யாவும், முழுமையாக மலமறைப்புற்றுக் கேவல நிலையில் இருக்கும்; எனவே உயிர்களின் அறிவிச்சை செயல்கள் விளங்கமாட்டா. அந்நிலையில் முதல்வன் இயற்றும் திருக்கூத்து இங்குக் குறிப்பிடப்படுகின்றது. கேவலநிலையில் முதல்வன் சூக்கும ஐந்தொழில் இயற்றுதல் மாபாடியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நள்ளிருளில் நாதன் பயின்றாடும் நட்டத்தினைச் 'சூக்கும ஐந்தொழில் நடனம்' எனலாம். (மாபாஷ்டியம் - 2ஆம் சூத்திரம்).

நட்டம் - திருக்கூத்து. பயிலுதல் இங்குப் பலகாலும் இயற்றுதல் என்று பொருள் கொள்ளத்தகும்.

பேரூழிக் காலத்தில் திருநடனம் செய்யும் பெருமான் உலகத்தைப் படைத்தருளிய பின் அடியார்களின் பிறப்பறும் பொருட்டுத் தில்லையில் திருநடனம் செய்தருள்கின்றான். எனவே அதனை அடுத்தாற்போல் குறிப்பிட்டருளினர்.

'பாண்டிநாடே பழம்பதி' எனப் போற்றும் முறையில் தென்பாண்டி நாட்டானே என ஏத்தினர்.

அல்லல் பிறவி அறுப்பானேயோ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

துன்பமயமான பிறவியை நீக்குவோனே ஓலம் என இவ்வாறு சொல்லித் துதிப்பதற்கு அரியவனை இயன்ற வரையில் துதித்து அவன் திருவடியாகிய திருவருளின் கீழ் அடங்கிப் பாடிய பாடலின் பொருளை உணர்ந்து ஓதவல்லவர்கள் சிவலோகத்தில் உள்ள கணங்கள் பலரும் வணங்கிப் போற்ற, சிவன் திருவடிக்கீழ்ச் சென்று பேரின்ப முற்றிருப்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அல்லல் பிறவி

மேலும்மேலும் வினைகளை ஈட்டி நிலவுலகம், மேலுலகம், கீழுலகம் என உழல்வதற்கு இடமாய் இருத்தலால் பிறவியை அல்லல் என்றே அருளாளர்கள் உரைப்பர். எனவே பிறவியை நமக்கு வழங்கியுள்ள இறைவனின் திருவுள்ளம், நாம் அதனிலிருந்து விடுபட்டு அவன் திருவருளில் திளைக்க வேண்டும் என்பதே. திருவருட் சார்பாகிய இலக்கினை அடைவதற்கு ஏற்றமுறையில் பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்குச் சிவபுராணத்தைப் பொருள் உணர்ந்து ஓதுதல் பெருந்துணையாகும்.

"அல்லல் பிறவி அறுப்பானே ஓ" என்றது துன்பமயமான பிறவியை நீக்கவல்லவனே அடைக்கலம் என்று முறையிடுதலாகும். இம்முறையீடே சிவபுராணத்தின் சாரமான கருத்து. இதனை "அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று... சொல்லியபாட்டின்" என்று இயைத்து அறிந்து கொள்ளலாம். பிறவியைச் சிறிதும் பொறுத்துக் கொள்ள முடியாத அதிபக்குவ நிலையில் இம்முறையீடு நிகழும்.

'சொற்கழிவு பாதமலர்' (திருவெம்பாவை-10) என்னும் கருத்தில் 'சொல்லற்குஅரியானை' என்று குறிப்பிட்டனர். இருப்பினும் திருவருளில் அடங்கி இயன்றவரை போற்றுதலே வினைநீக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதை அறிவுறுத்த 'சொல்லி' என்றருளினர்.

'திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டின்' என்றருளியதால் இப்பாட்டின் பொருளை உணர்ந்து சொல்வதற்குக் கல்வியறிவு மட்டும் போதாது; திருவடியில் மாறாத பத்தியும் வேண்டும் என்பது தெளிவாகும்.

'பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் சிவபுரத்தின் உள்ளார் பல்லோரும் பணிந்து ஏத்த சிவனடிக்கீழ்ச் செல்வர் என இயைத்துக் கொள்க.' 'சிவனடிக்கீழ்ச் செல்வர்' என்றது அயரா அன்பின் அரன்கழல் செல்லும் அநுபூதி நிலை.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

வெண்பிறை முடித்த வேணி விண்ணவன் அன்பிலாத
பண்பினர் எனினுந் தன்னைப் பாடினர்க் கிரங்கு மென்றே
எண்பெறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்து நாதன்
வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகல லுற்றார்.

– திருவாதவூரர் புராணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாய்பரியொன் றந்தப் பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து – மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

– திருக்களிற்றுப்படியார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt



திருவாசகத்திற்குப் பொருள் அம்பலவாணனே எனச் சொல்லி
மாணிக்கவாசகர் சிவச்சோதியில் கலத்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ நமசிவாய மூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.

Center for Shaiva Studies, Pondicherry Collection